பக்கங்கள்: 15

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 04 ஞாயிற்றுக்கிழமை 17.03.2024 கதிர் 131

* அரசமைப்பு மாற்றம் பற்றி தேவையானல் ஆராயலாம்

* தமிழ்த் தலைவர்களுடன் ஏப்ரலில் பேச்சு நடத்த தயார்

# ஜே.வி.பி. ஆட்சிக்கு வந்தால் மூன்று வேளை சோறு உறுதி

## கிளிநொச்சியில் அதன் தலைவர் அனுரகுமார தெரிவிப்பு

நாம் உங்களுக்கு ஒரு உறுதி மொழியைத்தருகின்றோம். நாம் ஆட்சியைப் பொறுப்பை ஏற்றதும் அனைவருக்கும் மூன்று வேளை உணவை உறுதிப்படுத்துவோம். மொழி, நிலம், கலாசாரம் ஆகிய உரிமைகளை உறுதிப்படுத்துவோம். அரசமைப்பு மாற்றம் தேவைப்பட்டால், அதுபற்றி ஆராய் ☞2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சி மீண்டும் ஒரு பலப் பரீட்சைக்குத் தயாராக வேண்டியிருக்குமென்றுதெரிகின்றது. கொழும்பில்தனியார்தொலைக்காட்சி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் கட்சியின் தலைமைக்கு மீண்டும் தேர்தல் நடத்தப்பட்டால் அதில் தான் போட்டியிடுவார் என்ற சாரப்பட சுமந்திரன் பதிலளித்திருந்தார்.

நிகழ்ச்சித்தொகுப்பாளர், மீண்டும் தலைமை தாங்க நீங்கள் தயாரா என்று கேள்வி எழுப்பினார். அவரது கேள்விநீங்கள்மீண்டும்தலைமைப் பதவிக்குப் போட்டியிடுவீர்களாக என்ற அர்த்தத்தில் அமைந்தது என்பதாகத்தான்கொள்ளவேண்டும்.

''நான் தலைமை ஏற்பதற்கு ஆமோதித்ததன் பின்னரேயே என்னை பிரேரித்தார்கள். ஆகவே அப்போது ஆம் என்று ☞2

## 15 இந்திய மீனவர்கள் வெள்ளியன்று கைது

### விடுவிக்கக்கோரி தமிழக முதல்வர் கடிதம்

தமிழ்நாட்டைச்சேர்ந்த 3 மீனவர்கள் உட்பட15மீனவர்கள்,இந்தியஎல்லையைத் தாண்டிமீன்பிடித்ததாகக்கூறி, இலங்கைக் கடற்படையினரால்கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில், அவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவிக்கக்கோரிமுதல்வர்மு.க.ஸ்டாலின் மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்குகடிதம்எழுதியுள்ளார்.

குறித்தகடிதத்தில்கூறியிருப்பதாவது: இந்திய மீனவர்கள் இலங்கை ☞2

## “உங்களை விடுவிக்க தொடர்ந்து போராடுவோம்” வாக்குறுதியை அடுத்து உண்ணாவிரதம் முடிவு

வவுனியா சிறைச் சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளஐவரின் உண்ணாவிரதப்போராட்டம்நேற்றுமுடித்துவைக்கப் பட்டது.அவர்களைவிடுவிப்பதற்காகசிறைக்குவெளியே தொடர் போராட்டங்கள் நடத்தப்படும் என்று வாக்குறுதி வழங்கப் பட்டதைத் தொடர்ந்து அவர்கள் தமது உண்ணாவிரதத்தினைக் கைவிட்டார்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

வெடுக்குநாறிமலையில் சிவராத்திரி தினத்தன்று பொலிஸாரால் கைது செய்யப்பட்டு வவுனியா சிறைச் சாலையில்தடுத்துவைக் கப்பட்டுள் 8 பேரில் 5 பேர் கடந்த 4 நாட்களாக உண்ணாவிரதப் போராட்த்தைமுன்னெடுத் திருந்தனர்.

வெடுக்குநாறிமலை ஆதி சிவன் ஆலயத்தில் கடந்த சிவராத்திரி தினத் தன்று வழிபாட்டில் ஈடுபட்டிருந்தபோது ஆலய பூசகர்உள்ளிட்டஎட்டுபேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.அவர்கள் தற்போது வவுனியா சிறைச்சாலையில் விளக்கமறியலில்வைக்கப் பட்டுள்ளனர்.

இந்நிலையில்தம்மை விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி அவர்களில் 5 பேர் கடந்த நான்கு நாட்களாக சிறைக்குள் உண்ணாவிரத ☞8

## வெடுக்குநாறிமலை அட்டூழியங்களை விசாரிக்கத் தனிக் குழு நியமியுங்கள்

### ஜனாதிபதிக்கு அமைச்சர் டக்ளஸ் கடிதம் மூலம் கோரிக்கை

வெடுக்குநாறிமலைச் சம்பவம்தொடர்பில்விசாரணைக்குழுவினை அமைப்பதற்குஏற்கனவே அமைச்சரவைக்கூட்டத்தில் கோரிக்கைவிடுக்கப்பட்ட நிலையில் அதற்கான எழுத்துமூலமான ஆவணத்தினை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடத்தில் கையளித்துள்ளார்.

இந்நிலையில்குறித்த விடயம் சம்பந்தமாக கருத்துவெளியிட்டஅவர், வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் ☞2

## வெடுக்குநாறி விவகாரம் குறித்து ரணிலை சந்திக்கத் தீர்மானம்

### ஜனநாயகக் கூட்டணி விக்னேஸ்வரனுடன் பேசிய பின்னர் அறிவிப்பு

வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்ட எட்டுப்பேரின் விடுதலை சம்பந்தமாக ஜனாதிபதி ரணில்விக்கிரமசிங்கவை நேரில்சந்திப்பதற்குநேற்றுக் கூடிய தமிழ் தேசியக் கட்சிகள் தீர்மானித்துள்ளதாக தமிழ் மக்கள் கூட்டணித் தலைவர், நாடாளுமன்றஉறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

வெடுக்குநாறி மலையில் இடம் ☞2

## அவசரத்துக்கு 107

## வடக்கு கிழக்கு மக்களுக்கு புதிய இலக்கம் அறிமுகம்

வடக்குமற்றும்கிழக்கு மாகாணங்களுக்காக107 என்ற பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பொதுமக்கள்பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் மற்றும்பொலிஸ்மாஅதிபர் தேஷபந்துதென்னகோன் அகியோரின் தலைமையில் இந்த துரித இலக்கம் நேற்றுஅறிமுகம்செய்யப் பட்டது.

24 மணித்தியாலங்களும் செயற்பாட்டில் இருக்கும்107 என்றதுரித இலக்கத்திற்குஅழைப்பை ஏற்படுத்தி முறைப் பாடுகளைச்செய்ய ☞2

## ஒவ்வொரு பிரஜைக்கும் பொலிஸ் பதிவு அவசியம்

### பொலிஸ மா அதிபர் வவுனியாவில் தெரிவிப்பு

இலங்கையில்உள்ள ஒவ்வொரு பிரஜையும் தமதுமுழுவிரங்களைக் கொடுத்து பொலிஸில் பதிவு செய்துகொள்வது அவசியம்.நாம்அனைத்துக் கிராமங்களிலும்பொலிஸ் பதிவுகளை மேற்கொள்கின்றோம் என்று பொலிஸ்மா அதிபர் தேசபந்துதென்னக்கோன் தெரிவித்தார்.

வவுனியாவில் நடைபெற்ற சமூக பாதுகாப்புக் குழுக்களை உருவாக்கும்செயற்றிட்ட நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது: ☞8

## 2026 முதல் ஓ.எல். பரீட்சை ஏழு பாடங்களுக்கு மட்டுமே

க.பொ.த. சாதரண பரீட்சை2026இல்இருந்து 07பாடங்களுக்குமட்டும் மாணவர்கள் தோற்ற வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம், கணிதம், விஞ்ஞானம், சமயம், தாய்மொழி, வரலாறு,ஆங்கிலம்,தகவல் தொழில்நுட்பம்ஆகியஏழு பாடங்களுக்கு மட்டுமே மாணவர்கள்பரீட்சைக்குத் தோற்றவேண்டும்என்று கூறப்பட்டுள்ளது.

கல்வி அமைச்சின் ஆலோசகர் பேராசிரியர் குணபால நாணயக்கார இதுகுறித்துத்தெரிவித்துள்ளதாவது:

தற்போது பரீட்சைப் பெறுபேறுகளில்உள்ளஏ, பி,சி,என்றவகைப்படுத்தல் இன்றி ஜி.பி.ஏ. முறை அறிமுகப்படுத்தப்படும். அத்துடன் எந்த ஒரு மாணவனும் ☞2

## கடற்கரைக் கழிவை முகாமை செய்ய விரைவில் புதிய கைப்பேசி செயலி

கடற்கரைகளில்கழிவு முகாமைத்துவத்திற்கு பயன்படுத்தக்கூடிய கைபேசி செயலி அறிமுகம்தொடர்பானகலந்துரையாடல்தேசியபாதுகாப்பு தொடர்பானஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்கதலைமையில் ஜனாதிபதிஅலுவலகத்தில் இடம்பெற்றது.

கடலோர மற்றும் கடல்சார் சூழலின் நிலையான வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் மற்றும் அமைப்புகளை முறையாக ஒருங்கிணைத்து, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின்தலையீட்டுடன் இந்த கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

நிலைபேறான கடல் மற்றும் கரையோர வலயத்தை உறுதி செய்யும்பொறுப்பில்ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களும் சமுத்திரம் மற்றும் ☞2

## விவசாய நவீனமயமாக்கல் பணியிடங்களாக கமநல சேவை நிலையங்கள் மாற்றப்படும்

### ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவிப்பு

கமநல சேவை அலுவலகங்கள்விவசாய நவீனமயமாக்கல்அலுவலகங்களாகமாற்றப்படும். அனைத்து விவசாயத் துறைகளும்ஓர்அமைச்சின் கீழ்செயற்படவேண்டும். விவசாயநவீனமயமாக்கல் திட்டம் எதிர்காலத்தில் அனைத்து பகுதிகளிலும் செயல்படுத்தப்படஉள்ளது என்று ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கதெரிவித்தார்.

ஆளும் தரப்பால் அமுல்படுத்தப்படும் அபிவிருத்தி வேலைத் திட்டங்களின்முன்னேற்றம் தொடர்பாக அனைத்து மாவட்டச் செயலாளர்களுடனும்,பிரதேச ☞2

## வட்டு. பவித்திரன் கொலையில் கடற்படையினர்: மனித உரிமைகள் ஆணைக்குழு விசாரணை

வட்டுக்கோட்டை பவித்திரன்கொலைக்கும் கடற்படையினருக்கும் இடையிலானதொடர்புகள் குறித்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய அலுவலகம் தனதுவிசாரணைகளைத் தொடங்கியுள்ளது.

வட்டுக்கோட்டை மாவடி பகுதியை சேர்ந்த தவச்செல்வம்பவித்திரன் (வயது23)அவரதுமனைவியுடன் கடத்தப்பட்ட பின்னர் வெட்டியும் குத்தியும் கொல்லப்பட்டார். கடற்படையினரின் காவலரணுக்குள் அவர்கள் நேரில் பார்த்திருக்கவே பவித்திரனையும் மனைவியையும் கொலைக் கும்பல் கடத்திச்சென்றது.

முன்னதாக அந்தக் கடற்படைக் காவலரணுக்குள் உயிர்ப்பிச்சை கேட்டு ☞8

## இனி இது .....

கூறிவிட்டு தற்போது மாட்டேன் என்று கூற முடியாது" என்றார். எனவே நீதிமன்றத்தில் வழங்கிய வாக்குறுதியின் அடிப்படையில் கட்சி மீண்டும் ஒரு ஒழுங்கான உட்கட்சித் தேர்தலைச் சந்தித்தால் அதில் சுமந்திரன் போட்டியிடக்கூடும்.

இந்த நிகழ்ச்சியில், கட்சியின் வழக்கு மற்றும் தற்போதைய நிலமைகள் சம்பந்தமாகவும் சுமந்திரன் கருத்துக்களைப் பகிர்ந்தார்.

கட்சியின் பொதுச்சபையில் ஜனவரி 21ஆம் திகதி மற்றும் ஜனவரி 27ஆம் திகதி ஆகிய நாட்களில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுகள் தீர்மானங்கள் செல்லுபடியற்றதாக்கக் கூறி திருகோணமலை மாவட்ட நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்குக்குக் கட்டாணை பிறப்பிக்கப் பட்டுள்ளது.

இந்த வழக்கு விசாரணைகள் மீண்டும் ஏப்ரல் 5ஆம் திகதி நடக்கும். அதன்போது நானும் ஒரு பிரதிவாதி என்ற அடிப்படையில் பிரசன்னமாகவுள்ளேன். அப்போது எனது நிலைப்பாடுகளை வெளிப்படுத்துவேன்.

அதேநேரம், நீதிமன்றத்தில் வழக்கு விசாரணையில் உள்ளமையால் அதுபற்றி பொதுவெளியில் பேசுவது நீதிமன்றத்தினை அவமதிக்கும் செயற்பாடாகும். ஆகவே அதுபற்றி அதிகமாகப் பேசமுடியாது. ஆனால், கட்சியின் எந்தவொரு அங்கத்தவரும் என்னிடத்தில் குறித்த வழக்கைக் கையாளுமாறு கோரவில்லை. பிரதிவாதிகள் தமக்கு இயைபான சட்டத்தரணிகளை நியமிப்பதற்கு உரித்துக்கள் உள்ளன. ஆகவே அதில் பிரச்சினைகள் இல்லை.

நானும் பிரதிவாதி என்ற அடிப்படையில் அடுத்த தடவை நீதிமன்றம் செல்வேன். கடந்ததடவை எனது தாயாரின் இறுதிக்கிரியைகள் காரணமாக அங்கு செல்வதற்கு முடியாது போய்விட்டது. இதேநேரம், 21ஆம் திகதி தீர்மானம் எடுக்கப்பட்டு 27ஆம் திகதி ஏனைய தெரிவுகளும் இடம்பெற்ற நிலையில் சில குழப்பங்கள் நீடித்திருந்தாலும் மறுதினமே கட்சியின் தேசிய மாநாட்டை நடத்தியிருக்க வேண்டும்.

அவ்வாறு மாநாட்டை நடத்தாது மூன்று வாரங்கள் தாமதித்தார்கள். அவ்வாறான தாமதத்தினை மேற்கொள்ளாது மாநாட்டை நடத்துமாறு நான் தெரிவு செய்யப்பட்ட தலைவர் மற்றும் முன்னைய தலைவர் ஆகியோரிடத்தில் கோரிக்கை விடுத்தேன். இருப்பினும் அது கவனத்தில் கொள்ளப்படவில்லை. மாநாட்டை நடத்தியிருந்தால் இவ்வளவு பிரச்சினைகள் நிகழ்ந்திருக்காது.

மேலும், நீதிமன்ற வழக்குகளின் பின்னணியில் யார் இருக்கின்றார்கள் என்று சான்றாதாரங்கள் இல்லாது கூறுவது தவறானதாகும். அதைக்கூட நீதிமன்ற அவமதிப்பாகக் கருதலாம். எந்தவொருவருக்கும் நீதிமன்றத்தினை நாடுவதற்கு அனுமதி உள்ளது. தற்போது சரத்பொன்சேகா ஐக்கிய மக்கள் சக்திக்கு எதிராக நீதிமன்றுக்குச் சென்றுள்ளார். அது ஜனநாயகத்தில் காணப்படுகின்ற விடயமாகும்.

மேலும் இலங்கையில் அடுத்து தேர்தலொன்று நிச்சயமாக நடைபெறும். அந்தத் தேர்தல் ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்தும். ஆனால் அது பொதுத்தேர்தலா அல்லது ஜனாதிபதி தேர்தலா என்பதுதான் முக்கியமான விடயமாகின்றது.

அரசியலமைப்பின் பிரகாரம் இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலை நடத்த வேண்டும். ஆனால் ஜனாதிபதிக்கு நாடாளுமன்றத்தினை கலைப்பதற்கான அதிகாரம் காணப்படுகின்றது. ஆகவே அவர் எவ்விதமான முடிவுகளை எடுப்பார் என்பதில்தான் அதிகளவு கவனம் உள்ளது.

எம்மைப்பொறுத்தவரையில் தற்போது ஜனாதிபதி தேர்தலில் வேட்பாளர்களாக தம்மை அறிவித்துள்ளவர்களுடன் பேச்சுக்களை நடத்துகின்றோம். அடுத்து வரும்காலத்தில் ஜனாதிபதி வேட்பாளர்கள் யார் என்பது உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் அவர்களுடனும் பேச்சுக்களை நடத்துவோம்.

அதன் பின்னர் அக்காலத்தில் நாம் உரிய முடிவுகளை எடுப்போம். அது கட்சி சார்ந்த முடிவாக அமையும். இதேநேரம், தமிழரசுக் கட்சிக்குள் பிளவுகள் ஏற்படாது. மாற்றுக்கருத்துக்கள் காணப்பட்டாலும், ஒற்றுமையாக கட்சி தொடர்ந்தும் பயணிக்கும் என்றார்.

அடுத்த தவணையில் வழக்குகள் முடிவுக்கு வந்து அந்த ஒற்றுமை வெளிப்படுமா என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## ஜே.வி.பி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வோம். அரசியல் உரிமைகள் பற்றி பேச்சுக்களை நடத்துவோம். வடக்கு தமிழ்த் தலைவர்களுடன் ஏப்ரல் மாதத்தில் பேச்சு நடத்த உள்ளோம்

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் தலைவரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான அநுரகுமார திஸநாயக்க தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் கிளிநொச்சி மாவட்ட மாநாடு நேற்று கூட்டுறவுசங்க மண்டபத்தில் நடைபெற்றது. அதில் பிரதமர அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

கிளிநொச்சியில் உள்ளவர்கள் தமிழ் மக்களாக முகங்கொடுக்கும் பிரச்சினைகளும், பொதுமக்களாக முகங்கொடுக்கும் பிரச்சினைகளும் உங்களின் முன்னால் உள்ளன.

இந்தப் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படவேண்டும். அவற்றிலிருந்து வெளியே வரவேண்டும். இந்தப் பிரச்சினைகள் இயற்கை அனர்த்தங்களால் ஏற்பட்டவை அல்ல. நாட்டின் அரசியல் கலாசாரம் மற்றும் நிர்வாகத்தினால் ஏற்படுத்தப்பட்ட பிரச்சினைகள். ஆகவே, தமிழ் மக்களாக நீங்களும், பொதுமக்களாக அனைவரும் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளிலிருந்து மீள்வதற்கு அரசியல் ரீதியான தீர்மானத்தினை எடுக்கவேண்டியுள்ளது.

கீழ்மட்ட மக்கள், துன்புறும் மக்கள், பொதுமக்கள் என்று அனைவரும், வடக்கு, கிழக்கு, தெற்கு என்ற பேதமின்றி புதிய ஆளும் தரப்பை நாம் உருவாக்க வேண்டும்.

இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெறவுள்ளது. கடந்த காலங்களில் ஜனாதிபதி தேர்தல்களின்போது வெவ்வேறு தீர்மானங்களை வடமாகாண தமிழ் மக்கள் எடுத்துள்ளார்கள்.

தேர்தலைபுறக்கணித்துள்ளீர்கள், தமிழ்வேட்பாளருக்குவாக்களித்துள்ளீர்கள், தமிழ் கட்சிகள் ஆதிரிக்கும் தென்னிலங்கைதேசியகட்சிகளுக்கு ஆதரவளித்துள்ளீர்கள்.

அதுதுமட்டுமன்றி, வடக்குமக்கள் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் அதிகளவில் கவனம் செலுத்துவது கிடையாது. அது கொழும்புக்குத் தலைமையை தேடுகின்ற, சிங்கள மக்களுக்குத்தலைமைவழங்குகின்ற தேர்தல் என்றநிலைப்பாட்டைத்தான் கொண்டிருக்கின்றீர்கள்.

எதிர்காலத்திலும் இந்தநிலைமையைத் தொடரமுடியாது. வடக்கும், கிழக்கும், தெற்கும் இணைந்து ஆட்சியை தீர்மானிக்கும் காலம் வந்துவிட்டது. அதற்காக நாம் அனைவரும் ஒன்றிணைவோம்.

வழக்கமாகசமஷ்டிதருகின்றோம் எமக்கு வாக்களியுங்கள், 13 பிளஸ் தருகின்றோம் எமக்கு வாக்களியுங்கள் என்றுதான் கூறுவார்கள். நாங்கள் அவ்வாறு கூறப்போவதில்லை. ஏனென்றால் நாங்கள் உங்களுடன் கொடுக்கல் வாங்கள் செய்வதற்கு வரவில்லை. அரசியல் என்பது வியாபாரம் அல்ல.

நாம் உங்களுக்கு ஒரு உறுதிமொழியைத் தருகின்றோம். நாம் ஆட்சியைப் பொறுப்பை ஏற்றதும் அனைவருக்கும் மூன்று வேளை உணவை உறுதிப்படுத்துவோம். மொழி, நிலம், கலாசாரம் ஆகிய உரிமைகளைஉறுதிப்படுத்துவோம்.

அரசமைப்பு மாற்றம் தேவைப்பட்டால், அதுபற்றி ஆராய்வோம். அரசியல் உரிமைகள் பற்றி பேச்சு நடத்துவோம்.

எதிர்வரும் ஏப்ரல் மாதத்தில் நாம் யாழப்பாணத்துக்கு செல்லவுளளோம். அங்கு வடக்கின் தமிழ்த் தலைவர்களுடன் பேச்சுக்களை நடத்தவுள்ளோம் தற்போது எம்முடன் முற்போக்கான தமிழ் தலைவர்கள் உரையாடல்களைச் செய்துவருகின்றார்கள். எமது ஆட்சி அமைகின்றபோது அவ்விதமான முற்போக்கு பிரதிநிதிகள் பங்காளர்களாக இருப்பார்கள்.

நாங்கள் ஆட்சியைப் பெற்றுக் கொண்டு தேசிய ஒற்றுமை குறித்து பேசுவதற்கு முனையவில்லை. நாம் தேசிய ஒற்றுமையுடனான ஆட்சியை அமைப்பதையே நோக்காகக் கொண்டிருக்கின்றோம்.

சுதந்திரத்தின் பின்னராக ஏற்படுத்தப்பட்ட பிரிவினைகளைத் தொடர்ந்தும் பின்பற்றிக் கொண்டு, பரம்பரை பரம்பரையாக ஆட்சி அதிகாரத்ததினைத் தக்கவைக்கும் கலாசாரத்தை மாற்றுதற்கு தெற்கு மக்கள் தயாராகி விட்டார்கள். அவர்களுடன் நீங்களும் இணைந்துகொள்ளுங்கள். தமிழர்களின் பங்களிப்புடனான ஆட்சியையே நாம் எதிர்பார்க்கின்றோம் - என்றார்.

## வெடுக்குநாறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்ற பொலிஸாரின் அத்துமீறல்கள் மற்றும் கைது செய்யப்பட்டவர்களின் விடுதலை சம்பந்தமாக தீர்மானம் எடுப்பது தொடர்பாக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் அங்கத்துவக் கட்சிகள் நேற்று விக்னேஸ்வரனுடன் அவரது இல்லத்தில் கூடிப் பேசின.

இதில், விக்னேஸ்வரன், செல்வம் அடைக்கலநாதன், சித்தார்த்தன், சுரேஷ்பிரேமச்சந்திரன், என்.சிறீகாந்தா, வேந்தன் மற்றும் பேராசிரியர் புஷ்பரட்ணம் ஆகியோர் பங்கேற்றிருந்தனர். இந்தச் சந்திப்பு தொடர்பில் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்ததாவது:

வெடுக்குநாறிமாலையில் நடைபெற்ற சம்பவம் தொடர்பில் கலந்துரையாடல்களை மேற்கொண்டிருந்தோம். அந்த வகையில் உடனடியாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைசந்தித்துஉரையாடுவதற்கு தீர்மானித்துள்ளோம்.

குறிப்பாக, கைது செய்யப்பட்டவர்களை பிணையில் விடுதலை செய்வதற்கானவலியுறுதல்களையும் அதற்கானகாரணங்களையும்நாங்கள் நாளை திங்கட்கிழமை அவருக்கு எடுத்துரைக்கத்தீர்மானித்துள்ளோம்.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற புறக்கணிப்பு, போராட்டம் உள்ளிட்ட விடயங்கள் சம்பந்தமாகத் தீர்மானங்கள் எடுக்கப்படவில்லை. உடனடியான செயற்பாடுகளின் பின்னர் அதல் முன்னேற்றம் காணாத பட்சத்தில் அடுத்த கட்டம் சம்பந்தமாக தீர்மானிப்போம் என்றார்.

## 2026 முதல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

க.பொ.த. உயர்தர வகுப்புகளில் கற்காதிருக்க முடியாது.

தற்போது 11ஆம் தரத்தில் நடத்தப்படும் கா.பொ.த.சாதாரணப் பரீட்சை 2026 முதல் 10ஆம் தரத்தில் நடத்தப்படும். அதற்கேற்ற வகையில் 2025இல் 09ஆம் தரத்திற்குவகுப்பேற்றம்செய்யப்படும் மாணவர்களுக்கு7பாடங்கள்மட்டுமே வகுப்பில் கற்பிக்கப்படும். இதேபோல் க.பொ.த. உயர்தரப் பரீட்சை 12ஆம் வகுப்பில் நடத்தப்படவுள்ளது.

இப்பரீட்சை 2027இல் நடத்தப்படவுள்ளதோடு புதிய கல்விச் சீர்திருத்தத்தின் அடிப்படை யிலான முதலாவது க.பொ.த. சாதாரண தர பரீட்சை2026இல்நடத்தப்படவுள்ளது என்றார்.

## 15 இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகளால் அடிக்கடி கைது செய்யப்படுவது குறித்து தான் ஏற்கெனவே பலமுறை கடிதம் எழுதியுள்ளேன். கடந்த வாரம் எழுதியிருந்தகடிதத்தில் இலங்கையில் சிறைபிடிக்கப்பட்டிருந்த 22 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாகவிடுவிக்க கோரியிருந்தேன். ஆனால் 15.03.2024 அன்று தமிழ்நாட்டைச்சேர்ந்த மூன்று மீனவர்கள் உட்பட 15 மீனவர்கள் அவர்களது மீன்பிடிப் படகுகளுடன் இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ளனர் என்பதை கவலையோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இதுபோன்று மீனவர்களை கைது செய்யும் சம்பவங்கள் அடிக்கடி நிகழ்வதால் மீனவர்களின் வாழ்வாதாரம் சீர்குலைவதுடன், மாநிலத்தில் கடலோரப் பகுதிகளில் வாழும் மீனவ சமூகத்தினரிடையே பெருத்த கொந்தளிப்பும், விரக்தியும் ஏற்பட்டுள்ளது.

இப்பிரச்சினைக்குத் தூதரக நடவடிக்கையின் மூலம் தீர்வு காண வேண்டியது மிக அவசியம். எனவே இந்தியா-இலங்கை நாடுகளுக்கிடையேயான கூட்டு நடவடிக்கைக் குழுவின் கூட்டத்தை உடனடியாகக் கூட்டி, அதன்மூலம் இலங்கையில் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க இலங்கை அதிகாரிகளை வலியுறுத்தவேண்டும். இலங்கைக் கடற்படையினரால் சிறைபிடிக்கப்பட்டுள்ள மீனவர்களை உடனடியாக விடுவித்திட உரிய நடவடிக்கையை மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் மேற்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் என்று அதில் தெரிவித்துள்ளார்.

## வடக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடியுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த சேவை முற்றிலும் தமிழ் மொழியில் செயற்படுத்தப்படுவதாக பொலிஸ் ஊடகப்பிரிவு குறிப்பிட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வழிகாட்டுதலுக்கு அமைவாக இந்த திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

## கடற்கரைக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கரையோரத்தின் தூய்மையைப் பேணுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்படவேண்டும் எனசுட்டிக்காட்டிய சாகலரத்நாயக்க, அந்தசெயற்பாடுகளை இலகுபடுத்துவதற்கு இந்தபுதியசெயலி உதவும் எனவும் குறிப்பிட்டார்.

கரையோரத் தூய்மைத் திட்டங்கள் மற்றும் கரையோரத் தூய்மையைப்பேணுதல் தொடர்பாக தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தையும் இதன்போது சுட்டிக்காட்டிய சாகல ரத்நாயக்க, கடலோர பகுதிகளில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு இதுநல்ல பங்களிப்பாக அமையும் என்றார்.

ஆறுகள் மற்றும் கால்வாய்களில் இருந்து வெளியேறும் கழிவுகள் மற்றும் கழிவுநீர் மற்றும் கழிவு நீர் நீண்டவெளியேற்றகுழாய்கள் மூலம் வெளியேற்றப்படுவதாலும் மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் பிற கடல் நடவடிக்கைகள் மூலம் கடற்கரை மற்றும் கடல் வளங்கள் கடுமையாக மாசுபடுவதாககடல்சார்சூழல்பாதுகாப்பு அதிகார சபை சுட்டிக்காட்டியது.

பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் தலையீட்டுடன் துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டதுடன், இந்த தொலைபேசி செயலியை இப்பணியின் சரியான ஒருங்கிணைப்புக்கு பயன்படுத்தஎதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சுற்றாடல் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்த உள்ளிட்ட அரச அதிகாரிகள், கடற்படைத் தளபதி, பொலிஸ் மா அதிபர் உட்பட பாதுகாப்புப் பிரிவின் தலைவர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்தக் கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

## வெடுக்குநாறிமலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிவராத்திரிதினத்தன்று வழிபாடுகளைச் செய்வதற்காகச் சென்றவர்கள் மீது பொலிஸார் தாக்குதல் நடத்தியமையானது மிகப்பெரும் தவறாகும்.

வெடுக்குநாறிமலையில் ஏற்கனவே வழிபாடுகளை மேற்கொள்வதற்கான அனுமதிகள் உள்ளநிலையில், இரவில் வழிபடமுடியாது என்று பொலிஸார் தடைகளை ஏற்படுத்த முடியாது. சிவராத்திரி என்பது சிவனுக்கு இரவில் செய்யப்படும் பூசை. ஆகவே அந்த மரபுகளை மாற்றியமைப்பது முரணான விடயமாகும்.

அந்தவகையில் வழிபாட்டுக்குச் சென்றவர்கள் மீது பொலிஸார் தாக்குதல்களை நடத்தியமையும் அவர்களை வெளியேற்றிய முறைமையும் பூசைகளை இடையில் நிறுத்தியமைஷ்யும் ஏற்றுக்கொள்ள முடியாது. இது தேசிய நல்லிணக்கத்தைப் பாதிக்கும் செயற்பாடாகும். இந்த விடயத்தினை ஏற்கனவே கடந்த வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் வெளிப்படுத்தியிருந்தேன்.

அத்துடன் விசாரணைக் குழுவொன்றை அமைத்துவிசாரணைகளை முன்னெடுக்குமாறும் கோரியிருந்தேன். இந்தநிலையில் தற்போது விசாரணைக்குழுவினை அமைப்பதற்கான எழுத்து மூலமான கோரிக்கையை ஜனாதிபதியிடத்தில் கையளித்துள்ளேன். விரைவில் அக்குழுவை நியமிப்பதற்கு ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளேன்.

அதேநேரம் வெடுக்குநாறிமாலை வழிபாடுகளின்போது பொலிஸார் பக்கத்தில் மட்டுமல்ல அதில் பங்கேற்றிருந்த சிறிய அரசியல் குழுவினரின் செயற்பாடுகளும் நிலைமைகளை மோசமாக்கியுள்ளது. ஆகவே இரண்டுதரப்பிலும் தவறுகள் இழைக்கப்பட்டுள்ளன - என்றார்.

## மும்மொழி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிசேன ஜனாதிபதியாகப் பதவியேற்றதன் பின்னர் இந்தியாவுக்கு மேற்கொண்ட முதலாவது உத்தியோகபூர்வவிஜயத்தின் போது, இந்திய அரசாங்கத்தின் நன்கொடையாக 2017ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட கதுருவலை மும்மொழி தேசிய பாடசாலையின் நிர்மாணப்பணிகள் சில காரணிகளால் இடைநிறுத்தப்பட்டன.

குறிப்பாக இப்பாடசாலையின் பணிகளை முடிக்க நிதி ஒதுக்கீடு செய்யுமாறு ஏற்கனவே உள்ள அரசிடம் பலமுறை கோரிக்கை விடுத்தும் சாதகமான பதில் கிடைக்கவில்லை. இதன்படி, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியிடம் விடுத்த விசேட கோரிக்கைக்கு அமைய, மும்மொழி தேசிய பாடசாலையை நிறைவுசெய்வதற்கு நிதிஒதுக்குவதற்கு விருப்பம் தெரிவித்திருந்தார்.

இதனையடுத்து இப்பாடசாலையின் தற்போதைய நிலையினை அறிந்து கொள்வதற்காக இலங்கையிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் வேலைத்திட்டங்களுக்கான ஆலோசகர் எல்டோஸ்மெத்யூ புன்னூஸ் மற்றும் அரச அதிகாரிகள் வெள்ளிக்கிழமை (15) கண்காணிப்பு விஜயமொன்றை மேற்கொண்டனர்.

இதன்படி எதிர்வரும் 06 மாதங்களுக்குள் இப்பாடசாலையின் பணிகளை நிறைவு செய்வதற்கு 250 மில்லியன் ரூபாய் இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டது.

## விவசாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர்களுடனும் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் இடம்பெற்ற கலந்துரையாடலில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

'வலுவான எதிர்காலத்திற்கான முன்னுரை ' 2024' என்ற தொனிப் பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இக்கூட்டத்தில், ஆளும் தரப்பால் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் அவற்றை நடைமுறைப்படுத்துவதில் ஏற்பட்டுள்ள சிக்கல்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது.

அங்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்த பின்னர், இந்த ஆண்டு மீண்டும் பொருளாதார வளர்ச்சியை எட்ட எதிர்பார்க்கப்படுகிறது. 2019ஆம் ஆண்டில், உயிர்த்த ஞாயிறு தாக்குதலினால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி தடைப்பட்டது. அதன்பின்னர் கொவிட் தொற்றினால், 2022ஆம் ஆண்டளவில் பொருளாதாரத்தின் வளர்ச்சி வேகமாகக் குறைந்தது. எனினும், பொருளாதார வீழ்ச்சியைத் தடுத்து கடந்த இரண்டு வருடங்களாக பொருளாதாரத்தைசீர்செய்ய முடிந்தது.

2024ஆம் ஆண்டில் 2% பொருளாதார வளர்ச்சியை அடைய எதிர்பார்க்கிறோம். இந்த ஆண்டு 2% வளர்ச்சியை எட்டினாலும், 2019ஆம் ஆண்டுக்கு முன்னர் இருந்த நிலையை அடைவதற்கு இரண்டு அல்லது மூன்று ஆண்டுகள் ஆகும். இருப்பினும், 2027 அல்லது அதற்கு முன்னதாக அந்த இலக்கை அடைய

தொடர்ச்சி 9ம் பக்கம்....

# தமிழர் தாயகத்தில் உக்கிரமடைந்து வரும் அரசின் இனவாத மதவாத செயற்பாடுகள்

## ஐக்கிய ,ராச்சிய ஈழத்தமிழர் பேரவை வன்மையாக கண்டிக்கிறது

அதி முக்கியத்துவம் வாய்ந்த நாளான சிவராத்திரி நாள் பூசை ,ம்மாதம் 8 ஆம் நாளன்று அனைத்து சிவன் ஆலயங்களிலும் கடைப்பிடிக்கப்பட்ட நிலையில் தமிழர் தாயகப் பகுதியான வவுனியா மாவட்டம் ஒலுமடுவில் உள்ள வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலயத்தில் வழிபாடுகளில் ஈடுபட்ட பக்தர்களை பொலிஸார் அவ்விடத்தில் ,ருந்து அகற்றி மத சுதந்திரத்தை முற்றாக மீறியமையை ஈழத்தமிழர் பேரவை ஐக்கிய ,ராச்சியம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கிறது.

அது தனது கண்டன அறிக்கையில் மேலும் தெரிவித்தவை வருமாறு –

ஒவ்வொருநாளும் தமிழர் தாயகத்தில் எம் மக்கள் ஏதோ ஒரு வகையில் அடக்கு முறைக்கு உள்ளாகியே வருகின்றனர். கடந்த ஆண்டும் ,வ்வாறான நிலைமை ஏற்படுத்தப்பட்டிருந்தமையால், தமது சொந்த நிலத்தில் நீதிமன்ற அனுமதியோடு வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டிய ஒரு மோசமான நிலைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கின்றமை, அம்மண்ணில் ,னவாத சிறிலங்கா அரசின் ஆளுகையின் கீழ் எம்மக்கள் சுதந்திரமாக வாழமுடியாது

நீதிமன்ற உத்தரவை மதிக்காத சிறிலங்கா பொலிஸ் முக்கியமாக ஆதிசிவன் ஆலயத்தில் நடைபெற்ற வழிபாடுகளுக்கு தடைகளை ஏற்படுத்தும் முகமாக அங்கு கூடியிருந்த பெண்கள், குழந்தைகள் உட்பட நூற்று ஐம்பதிற்கும் மேற்பட்ட பக்தர்களுக்கான குடிதண்ணீர் விநியோக வாகனத்தை ,டைமறித்து அதிலிருந்த மொத்த கொள்ளவு நீரையும் வீணாக்கி அவர்களை நீர் அருந்தவிடாமல் சிறிலங்கா பொலிஸார் சித்திரவதை செய்தமை மிலேச்சத்தனமான, பாரிய அடிப்படை மனித உரிமை மீறலாகும். அதுமட்டுமன்றி பூசை நடைபெறும் புனித தலத்தில் காலணிகளோடு உட்புகுந்தமை அம்மக்களின் மதநம்பிக்கையை அவமதிக்கும் மோசமான செயலாகும்.

அன்றைய தினம் வழிபாடுகளில் ஈடுபட்ட பக்தர்களான தம்பிராசா மதிமுருகராசா, துரைராசா தமிழ்ச்செல்வன், மகேந்திரன் நரேந்திரன், சிவம் ,லக்சன், கந்தசாமி கௌரிகாந்தன், திலகநாதன் கிந்துயன், ,ராசரத்தினம் விநாயகமூர்த்தி, சுப்பிரமணியம் தவபாலசிங்கம் ஆகியோர் சிறிலங்கா பொலிஸாரால் கடுமையாகத் தாக்கப்பட்டு

உதவச் சென்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினரையும் தாக்கியுள்ளனர். கைது செய்யப்பட்ட அனைவரும் சட்டத்திற்கு புறம்பான வகையில் நிர்வாணப்படுத்தப்பட்டு தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலையில் ,டவசதியின்மையால் ,ருப்பதற்குக் கூட ,டமில்லாத நிலையில் மூச்சுத்திணறல் ஏற்பட்டு ஒருவர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுள்ளார். சிறையில் உள்ளவர்களில் 5 பேர் தம்மை விடுதலை செய்யக்கோரி, உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அவர்களினதும் அவர்களின் குடும்பங்களின் நிலைமை மோசமான சூழலில் காணப்படுவதால் அனைவரையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டுமென ஈழத் தமிழர் பேரவை ஐக்கிய ,ராச்சியம் கேட்டுக்கொள்கிறது.

தமிழரின் தேசிய வாழ்வையும் வளத்தையும் அழித்து, தமிழர் தேசத்தையே சிங்கள ,ராணுவ ,றையாட்சியின் கீழ் அடிமைப்படுத்துவதுதான் சிங்கள அரசின் அடிப்படையான நோக்கம். இந்தவகையில் வடக்கு கிழக்கு எங்கும் தமிழர்களின் தொன்மையான வரலாற்று சிறப்பு மிக்க

என்கின்ற பெயரில் தமிழர் நிலங்களை அபகரித்து பௌத்த தூபிகளையும், புத்தர் சிலைகளையும் நிறுவி தொடர்ந்து தமிழர் மீது கலாசார இனவழிப்பை நிகழ்த்திவரும் பேரினவாத சிறிலங்கா அரசின் ,ந்த ,னவாத மற்றும் மதவாதச் செயலை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு, பொருளாதாரச் சிக்கலில் ,ருந்து மீள சர்வதேச நாணய நிதியத்திடம் பெறும் நிதியை தமிழர்களுக்கு எதிரான செயற்பாடுகளுக்கும் குறிப்பாக எமது பகுதிகளில் சிங்கள குடியேற்றங்களையும், பௌத்த விகாரைகளையும் அமைக்க சிறிலங்கா அரசு பயன்படுத்தி வருகின்றமையை சர்வதேச நிதிவழங்கும் நாடுகள் கவனத்தில் எடுக்கவேண்டும் என்பதையும் ஈழத்தமிழர் பேரவை ஐக்கிய ,ராச்சியம் வலியுறுத்துகிறது.

சிறிலங்கா சட்ட திட்டங்களில் நம்பிக்கை இழந்த மக்களாக, அந்நாட்டு பொலிஸாரால் சட்டவிரோதமாக கைது செய்யப்பட்டுள்ள எமது உறவுகளை விடுவிக்க ஒன்றுபட்ட மக்களாக அணிதிரள்வோம். எத்தனை துயர் வரினும் எத்தனை இடர் வரினும் நாம் எமது விடுதலைப் பாதையிலே தொடர்ந்து போராடுவோம். – என்றுள்ளது.(05)

# மகளின் முறைப்பாட்டின்பேரில் மீண்டும் தோண்டி எடுக்கப்பட்ட தந்தையின் சடலம்

கடந்த 2023 ஆம் ஆண்டு இந்தியாவில் உயிரிழந்த இலங்கையர் ஒருவரின் சடலம் இலங்கைக்கு கொண்டுவரப்பட்டு வத்தளை கெரவலப்பிட்டிய பொது மயானத்தில் அடக்கம் செய்யப்பட்ட நிலையில் வத்தளை நீதிவான் நீதிமன்ற உத்தரவில் மீள்பரிசோதனைக்காக கடந்த புதன் கிழமை மீள தோண்டி எடுக்கப்பட்டது.

ஈவ்வாறு உயிரிழந்தவர் மைக்கல் டானியேல் ஜெரோப் என்ற 67 வயதுடையவராவார்.

ஈவர் கடந்த 2023 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி அன்று இந்தியாவில் உள்ள தனது உறவினர் வீட்டில் வைத்து உயிரிழந்துள்ளார்.

தனது தந்தையின் மரணம் தொடர்பில் சந்தேகிப்பதாக உயிரிழந்தவரது மகள் வத்தளை நீதிவான் நீதிமன்றில் முன்வைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் நீதிவான் ,ந்திக்க அதுருலிய முன்னிலையில் உயிரிழந்தவரது சடலம் மீள தோண்டி எடுக்கப்பட்டது.

இவ்வாறு மீள தோண்டி எடுக்கப் பட்ட சடலம் மரண விசாரணைகளுக்காக ராகமை பொது வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டது.

இந்த சம்பவம் தொடர்பில் களனி குற்றப் புலனாய்வு பிரிவினர் மற்றும் வத்தளை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(05)

# நவக்கிரியில் வீட்டில் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் தீயிட்டு எரிப்பு







யாழ்ப்பாணம் நவக்கிரி பகுதியில் வீடொன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்கள் தீயிட்டு எரிக்கப் பட்டுள்ளது.




வீட்டினுள் நிறுத்தி வைக்கப் பட்டிருந்த மோட்டார் சைக்கிளை வெள்ளிக்கிழமை அதிகாலை 1.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் வந்த மூவர் பெற்றோர் குண்டு வீசி தீயிட்டு எரித்து வீட்டில் ஜன்னல்கள் கதவுகள் என்பவற்றையும் கூரிய ஆயுதங்களால் உடைத்து சேதமாக்கியுள்ளனர்.

வீட்டில் உள்ளவர்கள் உறங்கிக் கொண்டிருந்த வேளை கூரிய ஆயுதங்களுடன் வந்த மூவர் தமது வீட்டை உடைத்து மோட்டார் சைக்கிளையும் தீயிட்டு எரித்தனர் என வீட்டின் உரிமையாளர் தெரிவித்தார்.



குறித்த சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (05)

# “உங்களால் உங்கள் வீட்டுக்குப் பெருமை” பெண் ஆளுமைகளுக்கு மகத்தான மதிப்பு



(நூருல் ஹுதா உமர்)

'உங்களால் உங்கள் வீட்டுக்கு பெருமை' எனும் தொனிப்பொருளில் சிலோன் மீடியா போரம் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு அம்பாறை மாவட்டத்திலுள்ள 'பெண் ஆளுமைகள் 9 பேரை வீடு தேடிச் சென்று கௌரவிக்கும் நிகழ்வு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

சிலோன் மீடியா போரத்தின்





தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத் தலைமையில் இருகட்டங்களாக இந்தக் கௌரவிப்பு நிகழ்வு இடம்பெற்றது.

முதற்கட்டமாக காலையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு பிரதம அதிதியாக நீதிக்கான மையயத்தின் தலைவர் சட்டமுதுமாணி சஹ்பி எச்.இஸ்மாயில் கலந்து கொண்டார். இரண்டாம் கட்டமாக மாலையில் இடம்பெற்ற நிகழ்வுக்கு பிரதம அதிதியாக பொலன்நறுவ மாவட்ட நீர்ப்பாசனத் திணைக்கள பிரதம பொறியியலாளர் எந்திரி எம்.எஸ்.எம். நவாஸ் கலந்து கொண்டார்.

இதன்போது மருத்துவம், கவிதை, கட்டுரை, எழுத்து, ஊடகம் மற்றும் கல்வித்துறையில் பிரகாசிக்கும் பெண் ஆளுமைகளான அல்-ஸுஹரா வித்தியாலய அதிபர் எம்.எச்.எஸ். ரஜினுல் மஜீதியா, கல்முனை மஹ்மூத் மகளிர் கல்லூரி அதிபர் நஸ்மியா சனூஸ், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஸஹிலா இஸ்ஸதீன், சாய்ந்தமருது பிரதேச செயலக சமுர்த்தி வங்கிச் சங்க அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எப். றிகாஸா ஷர்பீன், அல்-அக்ஷா வித்தியாலய பிரதி அதிபர் ஏ. றெஜினா, சிறுவர் உரிமை பாதுகாப்பு அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம். கஸ்பியா வீவி, அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.எப். சுமைய்யா, எம்.ஐ.ஹைறுன் நிஸா ஆகியோரை வீடு தேடிச் சென்று சிலோன் மீடியா போரத்தின் தலைவர் கலாநிதி றியாத் ஏ.மஜீத், பிரதித் தலைவர் எம்.வை. அமீர், பொதுச் செயலாளர் ஏ.எஸ்.எம்.முஜாஹித், பிரதிச் செயலாளர் எம்.எம்.ஜபீர் உள்ளிட்ட குழுவினர் சான்றுப்பத்திரம் மற்றும் அன்பளிப்பு பரிசுகள் வழங்கி கௌரவித்தனர்.

(05)

# பல்கலை மாணவியின் கணினி திருட்டு; மற்றொரு மாணவி கைதாகி பிணையில்

பல்கலைக்கழகத்தில் கல்விகற்கும் மாணவியின் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான கணிணியைத் திருடியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டு கைதான பல்கலைக்கழக மாணவி ஒருவரை ,ரண்டு லட்சம் ரூபா சரீர பிணையில் விடுதலை செய்ய மஹர நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு சரீர பிணையில் விடுதலை செய்யப் பட்டவர் குருணாகல் பிரதேசத்தை சேர்ந்த 22 வயதுடைய பல்கலைக்கழக மாணவியாவார்.

குற்றம்சாட்டப்பட்டவரும் கணினியின் உரிமையாளரும் களனிப் பல்கலைக்கழக விடுதியின் அறையொன்றில் ஒன்றாக தங்கியிருந்தனர் எனப் பொலிஸார் நீதிமன்றில் தெரிவித்தனர்.

சந்தேகநபர் ,பல்கலைக்கழக விடுதியின் அறையில் யாரும் இல்லாத சந்தர்ப்பத்தின் போது அறையில் இருந்த கணினியை திருடி குருநாகல் பிரதேசத்தில் விற்பனை செய்துள்ளார் எனவும் இவ்வாறு விற்பனை செய்யப்பட்ட கணினி கைப்பற்றப்பட்டதாகவும் பொலிஸார் நீதிமன்றில் மேலும் தெரிவித்தனர்.

இதனையடுத்து இந்த வழக்கு தொடர்பான விசாரணைகளை எதிர்வரும் ஜூலை மாதம் 30 ஆம் திகதிக்கு ஒத்திவைக்க மஹர நீதிமன்ற நீதிவான் காஞ்சனா த சில்வா மேலும் உத்தரவிட்டுள்ளார். (05)

# யாழில் கூரிய ஆயுதங்களுடன் வாள்வெட்டுக் குழு மாட்டியது

யாழ்ப்பாணத்தில் வெள்ளிக்கிழமை அதிகாலை ஓட்டோவில் பயணித்த வாள்வெட்டுக் கும்பல் ஒன்று கைது செய்யப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண நகருக்கு அண்மையாக வெள்ளிக்கிழமை அதிகாலை 2 மணியளவில் ஓட்டோவில் பயணித்த 5 பேர் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டு, யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்யூஸ் வீதியை சேர்ந்த 25 வயதான ஓட்டோச் சாரதி, கொக்குவிலை சேர்ந்த 25 வயதான ,ளைஞன், யாழ்ப்பாண நகரத்தை சேர்ந்த 20 வயதான இளைஞன், குருநகரை சேர்ந்த 26 வயதான இளைஞன், வண்ணார்பண்ணையை சேர்ந்த 19 வயதான இளைஞன் ஆகியோர் கைது செய்யப்பட்டனர்.

அவர்கள் பயணித்த ஓட்டோவுக்குள் இருந்து வாள், இரும்பு கம்பி, இரும்பு குழாய் என்பன மீட்கப்பட்டன.

(05)

காலைக்கதிர் Kalaikkathir

நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# தேர்தலை முடிவு செய்தல்

பொதுஜனபெரமுனகட்சியைஉருவாக்கியவரான பஸில் ராஜபக்ச அமெரிக்காவில் இருந்து திரும்பியதன் பின்னர் முதலில் நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதே சிறந்தது என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார். ஆட்சி மாற்றம் சுமுகமாக நடப்பதற்கு அரசுத் தலைவர் தேர்தலுக்கு முன்பாக நாடாளுமன்றத் தேர்தலை நடத்துவதுதான் சிறந்தது என்பது அவரது வாதம்.

அமெரிக்காவில் இருந்து நாடு திரும்பிய பின்னர் அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவையும் வெளிநாட்டு ராஜதந்திரிகளையும் சந்தித்துப் பேசிய பின்னரேயே அவர் இந்தக் கருத்தைக் கொழும்பில் உள்ள ஊடகம் ஒன்றுக்கு வெளிப்படையாகத் தெரிவித்திருக்கிறார். அவரது கருத்து இந்த ஆண்டில் முதலில் நடக்கப் போகும் தேர்தல் எது என்கிற கேள்வியை மீண்டும் எழுப்பியுள்ளது.

இந்த ஆண்டு ஐப்பசி மாத இறுதிக்குள் ஒரு நாளில் அரசுத் தலைவர் தேர்தலை நடத்தியாகவேண்டும். அந்தத் தேர்தலை ஒத்தி வைப்பதற்கான திருகுதாள வேலைகள் எதிலும் தற்போதுள்ள ஆளும் தரப்பு ஈடுபடாத வரையில், அரசமைப்பின்படி உரிய தருணத்தில் தேர்தல் நடத்தப்பட்டாக வேண்டும். அதேசமயம் நாடாளுமன்றத்திற்கு 2020 தேர்தல் நடந்ததால், நான்கு ஆண்டுகள் கடந்து அதனைக் கலைக்கும் அதிகாரம் அரசுத் தலைவருக்குக் கிடைக்கும். எனவே நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு அதற்குப் புதிய தேர்தலை நடத்த முடியும்.

பொது ஜன பெரமுனவின் தயவில்தான் ரணில் விக்கிரமசிங்க அரசுத் தலைவரானார். பெரும்பாலும் பெரமுனவின் உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவைதான் பதவியில் உள்ளது. அதிலுள்ள பலரும் தற்போது அரசுத் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவோடு மிக நெருக்கமாகி, அடுத்த தேர்தலில் அவரோடு அணிசேர்ந்து நிற்கத் தயாராக இருக்கின்றார்கள் என்றபோதும், நாடாளுமன்றத்தில் இன்னமும் அதிகளவு உறுப்பினர்களைக் கொண்ட ஒரே கட்சியாக பெரமுனவே இருக்கின்றது. எனவே பெரமுனவின் விருப்பம் என்பதும் தேர்தலைத் தீர்மானிப்பதில் மிக முக்கியமானது.


இந்த ஆண்டில் ஒரு தேர்தலோ இரு தேர்தல்களோ வருவது நிச்சயம் என்றால் அது குறித்து ஆளும் தரப்பு முன்கூட்டியே முடிவுகளை எடுத்து அறிவிப்பதே சாலச் சிறந்தது. அந்தத் தேர்தல்களுக்காக மக்கள் தங்களைத் தயார்ப்படுத்திக்கொள்ளவும் தெளிவாகச் சிந்தித்து முடிவெடுக்கவும் அதுவே வசதியானது. அதைவிடுத்து, கடைசி வரை இழுத்தடித்துவிட்டு அவரச அவசரமாகத் தேர்தல்களை நடத்துவது அனைத்துத் தரப்பினரிடமும் அரசியல் குழப்ப நிலையை ஏற்படுத்தவே வழி வகுக்கும். அப்படிக் குழம்பிய குட்டையில் மீன்பிடிக்க முடியும் என்று மிக மலினமாக எண்ணாமல், இலங்கையின் நீண்ட ஜனநாயகப் பாரம்பரியத்தை தொடரும் விதத்தில் எந்தத் தேர்தல் எப்போது நடக்கும் என்பதை விரைந்து தீர்மானித்து மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும் ஆளும் தரப்பு.



# மீண்டும் களத்தில் பைடன் – டிரம்ப்

**எஸ். ஸ்ரீதுரை**

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடடான அமெரிக்காவில் இந்த வருடம் அதிபர் தேர்தல் நடக்க இருக்கின்றது. அமெரிக்க அதிபர்தேர்தல் என்பது நான்கு வருடங்களுக்கு ஒரு முறை நடைபெறுவது. கடந்த முறை போட்டியிட்ட ஜோ பைடன், டொனால்ட் டிரம்ப் ஆகிய இருவருமே இம்முறையும் போட்டியிடும் நிலையில், இதுவரையிலான இவர்களது வாழ்க்கைப் பயணம் போராட்டம் நிறைந்ததாகவே அமைந்திருந்தது.



எண்பது வயதைக் கடந்த அதிபர்ஜோ பைடனைப் பொறுத்தவரை, இளம் வயதில் திக்குவாய்ப் பிரச்சினையால் மிகவும் சிரமத்திற்கு ஆளாகியிருக்கிறார். பலருடைய கேலிப்பேச்சையும் எதிர்கொள்ள வேண்டியிருந்த அவர், இடைவிடாத பயிற்சியின் மூலம் நன்றாகப் பேசத் தொடங்கினார். 1972-ஆம் வருடம் நிகழ்ந்த விபத்து ஒன்றில் ஜோ பைடனின் மனைவியும், பெண் குழந்தையும் உயிரிழந்தனர். அவருடைய இளம் வயது மகன்கள் இருவருக்கும் பலத்த காயம் ஏற்பட்டு சிகிச்சை பெற்றனர். இவ்விபத்து ஏற்படுத்திய வலியிலிருந்து மெதுவாக மீண்டு வந்த ஜோ பைடன் அரசியல் பயணத்திலும் சிறிது சிறிதாக முன்னேறத் தொடங்கினார்.

செனட்டராக இருந்தவர், 2008, 2012 ஆகிய ஆண்டுகளில் நடைபெற்ற தேர்தலில் வெற்றி பெற்ற அதிபர்பராக் ஒபாமாவின் அரசில் அமெரிக்கத் துணை அதிபராகத் தேர்வு செய்யப்படும் அளவுக்கு உயர்ந்தார். இந்நிலையில் ஜோ பைடனின் முதல் மகன் ஜோசப் பியூ, புற்றுநோயால் 2015-ஆம் வருடம் உயிரிழந்தது அவருக்கு பேரிடியாக அமைந்தது. 1988-ஆம்வருடத்திலேயேஜனநாயகக் கட்சியின் அதிபர்வேட்பாளராகக் களம் இறங்கிய ஜோ பைடனின் பிரசார உரை வேறு சிலருடைய உரைகளைத் தழுவியிருந்ததாகக் குற்றச்சாட்டு எழுந்ததால், அதிபர்பதவிக்கான போட்டியிலிருந்து அவர்விலக வேண்டியதாயிற்று. அதே போன்று, 2008- ஆம் ஆண்டிலும் அதிபர்வேட்பாளராக விரும்பிய அவருக்கு, கட்சியினரின் ஆதரவு போதிய அளவில் கிடைக்காததால், பராக் ஒபாமாவின் அரசில் கிடைத்த துணை அதிபர்பதவியுடன் அவர்திருப்திப்பட்டுக்கொள்ள வேண்டியதாயிற்று.

பின்னர்ஒருவழியாக 2019- இல் ஜனநாயகக் கட்சியின் அதிபர்வேட்பாளராகத் தேர்வுசெய்யப்பட்டு, தேர்தலிலும் வென்று அமெரிக்க அதிபராகப் பதவியேற்றுக் கொண்டார். தற்பொழுது மீண்டும் அதிபர்பதவிக்கான போட்டியாளராகக் கட்சியினரால் தேர்வு பெற்றுள்ள ஜோ பைடன், மறுபடியும் டொனால்ட் டிரம்ப்பை எதிர்கொள்ள இருக்கிறார். முன்னாள் அமெரிக்க அதிபர்டொனால்டு டிரம்ப்பின் அரசியல் சாகசங்கள் ஒரு தனி ரகம். 2016-ஆம் வருடம் நடந்த அமெரிக்க அதிபர்தேர்தலில் முன்னாள் அதிபர்பில் கிளிண்டனின் மனைவி ஹிலாரி கிளிண்டனே வெற்றி பெறுவார்என்று உலகமே எதிர்பார்த்த நிலையில் டொனால்ட் டிரம்ப் வெற்றி பெற்றது ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. அத்தேர்தலில் ரஷிய அதிபர்புதினின் தலையீடு இருந்ததாகவும் கூறப்பட்டது.

பதவியேற்ற சில நாட்களிலேயே நிர்வாகத்தில் அதிரடி நடவடிக்கைகளைத் தொடங்கிய டிரம்ப், இஸ்லாமிய நாடுகளைச் சேர்ந்தவர்கள் அமெரிக்காவுக்கு வருவதைக் கட்டுப்படுத்தவும், வெளிநாட்டவர்அமெரிக்காவிற்குள் நுழைவதைத் தடுக்க மெக்ஸிகோ எல்லையில் தடுப்புச்சுவர்எழுப்பவும் உத்தரவு பிறப்பித்தார். இவரது காலத்தில் வடகொரிய அதிபருடனான ராஜதந்திர உறவு மோசமடைந்ததுடன், ஒரு தருணத்தில் அணு ஆயுதப் போர்மூளுமோ என்ற அச்சமும் ஏற்பட்டது. ஜார்ஜ் ஃப்ளாயிடு என்ற ஆப்பிரிக்க - அமெரிக்க இளைஞர்கொல்லப்பட்டத்தைத் தொடர்ந்து அமெரிக்கா முழுவதும் கலவரம் கிளர்ந்தெழுந்தது. அச்சமயம் அதிபர்டிரம்ப் வெளியிட்ட அறிக்கை நீதி கேட்டுப் போரடியவர்களை மேலும் சினமூட்டுவதாக அமைந்தது.

இது மட்டுமா? 2020-ஆம் ஆண்டு நடைபெற்ற அதிபர்தேர்தலில் ஜோ பைடன் வெற்றி பெற்ற நிலையில், டிரம்ப் தம்முடைய தோல்வியை எளிதில் ஒப்புக்கொள்ளவில்லை. எப்படியாவது தேர்தல் முடிவை நிறுத்தி வைக்க வேண்டும் என முனைந்ததுடன், தம்முடைய ஆதராவாளர்களைத்திரட்டிஅமெரிக்கநாடாளுமன்றக் கட்டடத்தை முற்றுகையிட்டு, ஜோ பைடனின் பதவியேற்பைத் தடுக்கவும் முயன்றார். தம்முடைய நடவடிக்கைகளின் மூலம் உள்நாட்டிலும், உலக அளவிலும் பரவலான எதிர்ப்புகளை சம்பாதித்த டொனால்ட் டிரம்ப் மீண்டும் அதிபர்தேர்தலுக்கான வேட்பாளராவார்என்று யாருமே எதிர்பார்த்திருக்க மாட்டார்கள். ஆனாலும், மிகவும் நம்பிகையுடன் இருந்தார்டிரம்ப்.

இடைப்பட்ட காலத்தில் சில வழக்குகளையும் எதிர்கொள்ள வேண்டியிருந்த டிரம்ப், இந்திய அமெரிக்கராகிய விவேக் ராமசாமி, நிக்கி ஹாலே ஆகியோருடைய கடுமையான போட்டிகளை சமாளித்து அதிபர்வேட்பாளராகியிருப்பது பலரது புருவங்களையும் உயர்த்தியுள்ளது. பைடன், டிரம்ப் ஆகிய இருவரிடையிலும் மலைக்கும் மடுவுக்குமான வித்தியாசங்கள் இருந்தாலும்,




அரசியலில் உச்சத்தைத் தொடுவதைக் குறித்த உத்வேகத்திலும்,எதிர்மறையானசூழ்நிலைகளையும் மீறி அந்த உச்சத்தை அடைந்து விடலாம் என்ற தன்னம்பிக்கையிலும் இவர்கள் இருவரும் சமமாகவே இருக்கிறார்கள்.

இவ்வருடத்திய அமெரிக்க அதிபர்தேர்தலில் பைடன், டிரம்ப் ஆகிய இருவரில் வெற்றி பெறப்போவதுயாராகஇருப்பினும், இவ்விருவருமே தளராத தன்னம்பிக்கைக்கு உதாரணமாய்த் திகழ்கின்றனர்என்பதில் ஐயமில்லை.

காலைக்கதிர் Kalaikkathir

# சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியில் புலமைச் சிட்டுக்களுக்குக் கௌரவம்



(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலயத்தில் இம்முறை (2023) இடம்பெற்ற தரம் ஐந்து புலமைப்பரிசில்பரீட்சையில்சித்திய டைந்த மாணவர்களைக் கௌர விக்கும்நிகழ்வுவித்தியாலயத்தின் கேட்போர்கூடத்தில்இடம்பெற்றது.

வித்தியாலயத்தின் அதிபர் யூ.எல்.நசார் தலைமையில் இடம் பெற்ற இந்நிகழ்வில், ஸ்ரீலங்கா முஸ்லிம்காங்கிரஸின்பிரதித்தலை வரும் திகாமடுல்ல மாவட்ட நாடா ளுமன்ற உறுப்பினருமான சட்டத் தரணி எச்.எம்.எம் ஹரீஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

தரம் 5 புலமைப் பரிசில் பரீட் சையில் வெட்டுப் புள்ளிகளுக்கு மேல் புள்ளிகளைப் பெற்ற மாணவர்கள் அனைவருக்கும் அதிதிகளால் மாலை அணிவித்து, மகுடம் சூட்டி, கலாபூஷணம் ஏ. இஸ்ஸதீன் தலைமையிலான மருதூர் கலைமன்ற கோலாட்டக் குழுவினர் மற்றும் பாண்ட் வாத்திய குழுவினரால் வரவேற்பு மற்றும் கௌரவம் அளிக்கப்பட்டு மாணவர்கள் வீதி வழியாக அழைத்து வரப்பட்டனர்.

கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ். சஹ்துல் நஜீம் நிகழ்வில் கௌரவ அதிதி யாகவும் அம்பாறை மாவட்ட பொறியியலாளர்ஏ.எம். சாஹிர், கல் முனை வலயக்கல்வி அலுவலக கணக்காளர் வை.ஹபீபுல்லாஹ், பிரதிக் கல்வி பணிப்பாளர்களான எம்.எச்.எம்.ஜாபீர், திருமதி எம்.எச். றியாஸா, சாய்ந்தமருது கோட்டக்கல்விப் பணிப்பாளர் என்.எம். அப்துல் மலிக், உதவிக் கல்விப் பணிப்பாளர் ஏ.அஸ்மா மலிக் ஆகியோர் நிகழ்வில் விசேட அதிதிகளாகவும் மற்றும் பொறியி யலாளர் எம்.சி. கமால் நிஷாத், முன்னாள் அதிபர் ஐ.எல்.ஏ.மஜீத், கல்முனைவலயக்கல்விஅலுவலக ஆரம்பக்கல்விவளவாளர்எஸ்.எம். எம். அன்சார், சாய்ந்தமருது சிங்கர் ஷோரூம் உரிமையாளர் எஸ்.எச். ஜிப்ரி, நாடாளுமன்ற உறுப்பினரின் பிரத்தியேக செயலாளர் நௌபர் ஏ. பாவா உட்பட பிரதேசத்தின் இதரபாடசாலை அதிபர்களானஎம்.ஐ.எம்.இல்யாஸ், எம்.எஸ்.எம்.ஆரிப், எம்.ஐ. சம்சுதீன், எம்.எஸ். நபார் ஆகியோர் விசேட அழைப்பாளர்களாகவும் கலந்து சிறப்பித்தனர்.



மற்றும்பாடசாலையின் பிரதி, உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர் சங்கத்தினர், பாடசாலை அபிவிருத்திக் குழுவினர், மாணவர்கள், பெற்றோர்கள், ஊர் நலன் விரும்பிகள், வர்த்தகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

நிகழ்வில் உரையாற்றிய பிரதம அதிதி நாடாளுமன்ற உறுப்பினர், சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ், பாட சாலைக்கு தன்னால் முடியு மான அனைத்து உதவிக ளையும் செய்வதாக உறுதி படத் தெரிவித்தார்.

நிகழ்வில் புலமையில் சாதனை நிலை நாட்டிய மாண வர்கள் அனைவருக்கும் சான்றி தழ்கள் மற்றும் பதக்கங்கள், வெற்றிக்கேடயங்கள், புத்தகப் பைகள் வழங்கிக் கௌரவிக் கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது.

ஆசிரியரும் அறிவிப்பா ளருமான ஏ.எல்.நயீம் நிகழ்வை தொகுத்து வழங்கினார்.(05)

# என் கணித போட்டியில் தேசிய மட்டத்தில் முதலிடம் பெற்ற மாணவனுக்கு கௌரவம்






தேசியமட்டஎண்கணிதப்போட்டியில் (அபாகஸ்) பாடநெறியில் மட்டம் ஒன்றில் நிகழ் நிலை ஊடாக பங்குபற்றிய. குளோபல் விஸ்டெம் இன்டநெசனல் பாடசாலையில் கல்வி கற்றதரம் 06 இல் மூதூர் அல் ஹிதாயா மஹாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் மூதூர்மாணவன்பரீஸ்அப்ஸிஹிலாலி கொழும்பு சென்ஜோசப் கல்லூரியில் நடைபெற்ற எண் கணிதப் போட்டியில் பங்குபற்றி அகில இலங்கை ரீதியில் முதலாம் இடத்தைப்பெற்றுள்ளார்.

நேரடியாக நடைபெற்ற இவ் இறுதிப்போட்டியில் 150 மாணவர்கள் பங்குகொண்டனர். இதில் இம் மாணவன் 5 நிமிடத்தில் எண்பது கணித வினாக்களுக்கு சரியாக விடையளித்து அகில இலங்கை ரீதியில் முதலிடம் பெற்று சாதனை படைத்து மூதூருக்குப்பெருமை சேர்த்துள்ளார். (05)


குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)
பம்பரகந்த, தியலும, துன்கிந்த, ஈராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Chikne Fried Rice with
Kothu Rotty With Vegitable
In Indian Style
DESSERT
Ice Cream Cup
Fruit Salad
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml
Milk Drink
Cocacola M
Pepsi M
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# வளங்களை அள்ளித் தரும் கடல் சவால்களை சந்திக்க வைக்கிறது

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு



எல்லையற்ற வளங்களை அள்ளித் தரும் கடலானது பல்வேறு சவால்களையும் எதிர்கொள்ள வைப்பதாக கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

கொழும்பு சினமன் கிராண்ட் ஹோட்டலில் பாத் பைண்டர் அமைப்பு மற்றும் மனித நேய கலந்துரையாடலுக்கான மத்திய நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட காலநிலை மாற்றம்,மனிதநேய முகாமைத்துவம் மற்றும் பொதுக் கொள்கை தொடர்பான வட்டமேசை மாநாட்டில்

உ‌ஷ்யாற்றும் போதே அவர் ,வ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில் –

இலங்கை கடற்றொழிலாளர்கள் குறிப்பாக சிறிய அளவிலான கடற்றொழிலாளர்கள் எதிர்கொள்ளும் அவலநிலை தொடர்பாக இம் மாநாட்டில் அவதானம் செலுத்தப்படுவது தொடர்பாக கடற்றொழில் அமைச்சர் என்ற வகையில் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எமதுநாட்டுக்குபுராதனப்பெருமைமிகுந்த கடலுடன் தொடர்புடைய வரலாறு உள்ளது. ஏராளமன மீன் வளங்களையும் அது

எமது கடற்றொழிலாளர்களுக்கு வழங்கி வருகிறது. ,ருந்தாலும் கடலானது உடனடியாக தீர்வு காணப்பட வேண்டிய சவால்களையும் அது ஏற்படுத்தி வருகிறது. மீன்கள் அருகி வருகின்றமை தொடர்பாக நாம் அவதானம் செலுத்த வேண்டியுள்ளது. அதிகளவில் மீன்களைப் பிடித்தல், சமுத்திரம் வெப்பமடைதல், கடல் மாசடைதல், கடலின் சுற்றாடல் பாதிப்படைதல், அறிக்கையிடப்படாத மற்றும் ஒழுங்குப்படுத்தப்படாத சட்டவிரோத கடற்றொழில் முறைகள் ,இதில் முக்கிய பங்கு வகிப்பதாக ஐ.நா. உணவு மற்றும் விவசாய கடற்றொழில் அமைப்பின் அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

இது எமது கடற்றொழிலளர்களின் வாழ்வாதாரத்தை மட்டும் பாதிக்க வில்லை. கடலின் ஒட்டுமொத்த சுற்றாடலின் ஆரோக்கியத்துக்கும்பாதிப்பைஏற்படுத்துகிறது. அப் பிரச்சினையை வெற்றி கொள்வதற்காக நான் நீர் வேளாண்மை மற்றும் கடல் வேளாண்மை மூலம் மீன் உற்பத்தியை அதிகரிப்தற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறேன். ,ந்த சுற்றாடல் நலன் சார்ந்த நடவடிக்கைகளால் கடலுணவு உற்பத்தி அதிகரித்துள்ளது.

அதற்குப் புறம்பாக கடந்த பல வருடங்களாக பாரிய பிரச்சினைகளை எமது கடற்றொழில் சந்தித்து வருகிறது. குறிப்பாக வடமாகாண கடற்பிராந்தியத்தில் இந்திய இழுவைப் படகுகளின் அத்து மீறிய சட்டவிரோத நடவடிக்கள் அதிகரித்து வருகின்றன. ,தனால் கடலின் சுற்றாடல், உயிரினங்கள், மீன்களின் சினை முட்டைகள், பவளப்பாறைகள் அழிக்கப்படுவதுடன் ஈலங்கை கடற்றொழிலாளர்களின் மீன்பிடி படகுகள் மற்றும் கடற்றொழில் உபகரணங்களுக்கு சேதத்தை ஏற்படுத்துகிறது. பாரிய இந்திய இழுவைப்ப படகுகளின் தொடர்ச்சியான வருகை காரணமாக .இலங்கை கடற்றொழிலாளர்களின்வாழ்வாதாரம்பாதிக்கப்படுகிறது. அவர்கள் மீன்கள் மற்றும் ,றால்களை மட்டும் பிடிப்பதில்லை மீன் குஞ்சுகளையும்; அழித்து விடுகிறார்கள்.

எமது நாடு ,ந்து சமத்திரத்தின் கப்பல் போக்குவரத்தின் கேந்திர நிலையத்தில் அமைந்திருப்பதால் கடல்பாதுகாப்பு தொடர்பான அச்சுறுத்தல்களையும்; எதிர்கொண்டு வருகிறோம். சட்டவிரோத ஆட்கடத்தல், போதைப் பொருள் கடத்தல் மற்றும் கடற்கொள்ளை என்பன நாங்கள் எதிர்கொள்ளும் முக்கியஅச்சுறுத்தல்களாகும். துரதிஷ்டவசமாக ஆளணி மற்றும் வளப் பற்றாக்குறை ,வ்விடயத்தில் நாங்கள் செயற்படுவதற்கு தடையாக உள்ளது.

காலநிலை மாற்றம் தற்போது மற்றொரு அச்சுத்தலாகும். கடல்நீர்மட்டம் அதிகரிப்பதால் எமது கரையோர கடற்றொழில் சமூகம் பாதிக்கப்படும்அதேவேளைகடல்வெப்படைதல் கடலின் சுற்றாடலுக்கு பாதிப்பை ஏற்படுத்தி வருகிறது. நிலைபேறான கடற்றொழிலை உறுதிப்படுத்துவதற்கும்

கடலரிப்பபைத் தடுப்பதற்கும் செயல் திறன்மிக்க அணுகுமுறை தேவை.

இலங்கைபொருளதாரத்தில் முதுகெலும்பாக கடற்றொழிலை மாற்றுவதற்காக நீலப் பொருளாதாரத் திட்டத்தை அமுல்படுத்துவதற்கான கொள்கைகளை நாங்கள் வகுத்துள்ளதுடன் அதற்காக நிபுணர் குழுவையும் நாங்கள் நியமித்துள்ளோம்.

இதேவேளை சட்டவிரோத மற்றும் அறிக்கையிடப்படாத கடற்றொழில் முறைகளைத் தடுப்பதற்காக எனது அமைச்சு புதிய கடற்றொழில் வரைவை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது. இச் சவால்கள் வெற்றி கொள்ள முடியாதவை அல்ல. கூட்டு நடவடிக்கை மற்றும் சர்வதேச ஒத்துழைப்புடன் வளமான எதிர்காலத்தை நோக்கிநாம்முன்னேறமுடியும்.இதன்பொருட்டு நாங்கள் கடல் உட்கட்டமைப்பு மற்றும் நவீன தொழில்நுட்பம், பிராந்திய ஒத்துழைப்பை பலப்படுத்தல், நிலைபேறான கடற்றொழில் நடவடிக்கைகளைஊக்குவித்தல்மற்றும்நவீன தொழில் நுட்பம் முயற்சிகளை ஊக்குவித்தல் ஆகிய முக்கிய மூலோபாயங்களை இனங்கண்டுள்ளோம்.

தூரநோக்கு மற்றும் அர்ப்பணிப்புடன்



கூடிய செயற்பாடுகளால் ,ச் சவால்களை எம்மால் வெற்றிகொள்ள முடியும். எமது கடலைபாதுகாப்பதன்மூலமும்நிலைபேறான கடல் வளத்தை உறுமதிப்படுத்துவதன் வாயிலாகவும்.புதுமைகளைஉள்வாங்குவதன் ஊடாகவும் இச் சவால்களை எமது வளமான எதிர்காலத்திற்கான வாய்ப்புகளாக நாம் மாற்றிக் கொள்ளலாம்.

இந்தச் சவால்கள் தொடர்பாக அவதானம் செலுத்துமாறு இங்கு கூடியிருப்போரிடம் வேண்டிக் கொள்கிறேன். – என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் புதிதாக உருவாக்கப்பட்டு வரும் கடற்றொழில் வரைவின் பிரதியொன்று கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவால் பாத் பைண்டர் அமைப்பின் தலைவர் மற்றும் தூதுவர் பேர்னாட் குணதிலக்கவுக்கு வழாங்கப்பட்டது.

இந்தக் கலந்துரையாடலில் பாத் பைண்டர் அமைப்பின் தலைவர் மற்றும் தூதுவர் பேர்னாட் குணதிலக்க, மனிதநேய கலந்துரையாடல் மத்திய நிலையத்தின் தெற்காசிய ,ணைப்பாளர் ஹேமந்த் கட்டொச்,பேராசிரியர் வசந்த ரத்நாயக்க, சிரேஷ்டவிரிவுரையாளர்ஹசான்விஜேசிங்க, பாத்பைண்டர்அமைப்பின்தூதுவர்அஹமட் ஜவாத், மனிதநேய கலந்துரையாடல் அமைப்பின்தெற்கு மற்றும் தென்கிழக்காசிய திட்ட அமைப்பாளர் டாக்டர் ஸ்ரீஜித் சுகுனன் மற்றும் டாக்டர் ஸ்ரீவ் கிரீச் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.(05)



காலைக்கதிர் Kalaikkathir

## உங்களை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

போராட்டத்தைமுன்னெடுத்திருந்தனர். இவர்களின்விடுதலையைவலியுறுத்தி வடக்கு கிழக்கில் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. .

அவர்களை விடுவிக்கக் கோரியும் வெடுக்குநாறிமலையில் பொலிஸாரின் அடாவடியைக் கண்டித்தும் வவுனியாவில் நேற்று பெரும் ஆர்ப்பாட்டப் பேரணி முன்னெடுக்கப்பட்டது. அதைத் தொடர்ந்துவவுனியாசிறைச்சாலைக்கு சென்ற மதத் தலைவர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் உண்ணாவிரத போராட்டத்தில் ஈடுபட்டவர்களுடன் கலந்துரையாடியதுடன் அவர்களின் விடுதலைக்குதாங்கள்பொறுப்பென வழங்கிய வாக்குறுதியினை அடுத்து அவர்கள் உண்ணாவிரத போராட்டத்தைஇடைநிறுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## ஒவ்வொரு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் அனைத்துக் கிராமங்களிலும் பொலிஸ் பதிவுகளை மேற்கொள்கின்றோம். அதற்கான காரணம்என்ன? உங்களதுகிராமங்களில்புதிதாகஇருப்பவர்களைஅடையாளம் காண்பதற்கே ஆகும்.

போதைப்பொருள்வியாபாரத்துக்கு எதிரான செயற்பாடுகளை நாம் முன்னெடுக்கின்றபோது அதனுடன் தொடர்புடையவர்கள் வேறு கிராமங்களில் ஒழிந்து கொள்ள முடியும். அவர்களைஅடையாளம்காண்பதற்கு அந்தப்பதிவுகள்உதவியாகஇருக்கும்.

அதுமட்டுமன்றி, உயிர்த்தஞாயிறு தாக்குதல்களைமேற்கொண்டவர்கள் அடிப்படைவாதத்துக்குள்ஊறிபின்னர் கிராமங்களில்ஒழிந்திருந்துதான்மனித வெடிகுண்டுகளாகமாறியிருந்தார்கள்.

எதிர்காலத்தில் அவ்விதமான நிலைமைகள்மீண்டும்ஏற்படுவதற்கு இடமளிக்கக்கூடாது. ஆகவேஒவ்வொரு பிரஜைகளும் முழுமையான விவரங்களை வழங்கி பதிவுகளை மேற்கொள்வது அவசியமாகும்.

மேலும், போதைப்பொருளுடன் தொடர்புடைய 8034 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர். அதேபோன்று போதைப்பொருள் வர்த்தகத்துடன் தொடர்புடைய726மில்லியன்ரூபாய் சொத்துக்கள் கைப்பற்றப்பட்டுள்ளன.

போதைப்பொருள் கடத்தல்கள், வியாபாரங்களுடன் தொடர்புடையவர்களின் வர்த்தகங்கள் அரசுடமையாக்கப்படும். அவர்கள் கடந்த காலங்களில்செயற்பட்டதைப்போன்று எதிர்காலத்திலும்செயற்பட முடியாது.

இந்தச் செயற்றிட்டத்தினை முன்னெடுப்பதற்க தெற்கு மக்கள் உதவி புரிந்தது போன்று வடக்கு மக்களும்ஒத்துழைப்புக்களைவழங்க வேண்டும் என்றார்.

## வட்டு. ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பவித்திரனும் அவரது மனைவியும் தஞ்சமடைந்திருந்தனர். எனினும் கடற்படையினர்அவர்களைஅங்கிருந்து அடித்துவிரட்டமுற்பட்டனர். அப்போதே கொலைக் கும்பல் கடற்படையினர் முன்பாகவே இருவரையும் கடத்திச் சென்றதைக் காட்டும் காணொலிகள் வெளியாகி இருக்கின்றன.

இந்தக் கொலையுடன் கடற்டையினருக்கு இருக்கும் தொடர்புகள் குறித்துஇலங்கைமனிதஉரிமைகள் ஆணைக்குழுவின்யாழ்ப்பாணபிராந்திய அலுவலகம்விசாரிக்கத்தொடங்கியுள்ளது. ஊடகங்களில் வெளியாகிய செய்திகள் மற்றும் காணொலிகளின் அடிப்படையில் தனது சொந்தப்பிரேரணையாகஎடுத்துகுறித்தவிசாரணைகளை ஆரம்பித்துள்ளது.

வெள்ளிக்கிழமைகுறித்தகடற்படைமுகாமுக்குசென்றமனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணபிராந்தியஉத்தியோத்தர்கள்விசாரணை நடத்தினர். இது தொடர்பில் கருத்து தெரிவித்த இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணபிராந்தியஇணைப்பாளர் ரி.கனகராஜ், ஊடகங்களில்வெளியாகிய செய்திகள் மற்றும் காணொலிகளின் அடிப்படையில் கடற்கரையினரின் செயற்பாடுகள் தொடர்பில் அறிக்கை கேட்டுள்ளோம்.

அதுமட்டுமல்லாதுகுறித்தஇளைஞனின்கொலைதொடர்பில்பொலிஸாரால் மேற்கொள்ளப்படும்விசாரணைகள் தொடர்பிலும் விரிவான அறிக்கை கேட்டுள்ளோம் என்று தெரிவித்தார்.



காலைக்கதிர் Kalaikkathir

## விவசாய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும் என்று நான் இலக்கு வைத்துள்ளேன். 2022ஆம்ஆண்டு நான்நாட்டைப்பொறுப்பேற்றபோது நாட்டின் பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்திருந்தது.

இதன்போது சிறுபோகத்தை வெற்றிகரமாக செய்வதற்கு முன்னுரிமை கொடுத்தேன். அதன் பின்னர் பெரும்போகத்தில் நல்ல விளைச்சல் கிடைத்தது. அப்போது எங்களிடம் பணம் இருக்கவில்லை. உலக உணவு அமைப்பின் மூலம் 36,000 மெட்ரிக் தொன் உரத்தை அமெரிக்காஎங்களுக்குவழங்கியது. இந்தியாவில்இருந்து40,000மெட்ரிக் தொன்யூரியாவழங்கப்பட்டது. உலக வங்கியிடமிருந்து 135,000 மெட்ரிக் தொன்உரம்கிடைத்தது. இதனாலேயே சிறுபோகத்திலும், பெரும்போகத்திலும் சிறந்த முறையில் விவசாயம் செய்ய முடிந்தது.

தற்போது நிலைமை சீராகி வருகிறது. அடுத்த10,-15ஆண்டுகளில் நாட்டில் குறைந்த வருமானம் பெறுபவர்களின்எண்ணிக்கையைக் குறைப்பதே எங்கள் நோக்கம். எவ்வாறாயினும், தற்போதுநிவாரணம் தேவைப்படும்மக்களுக்கு அவற்றை வழங்கநடவடிக்கைஎடுத்துள்ளோம். அதன்படி, நாங்கள்வழங்கும்பணத்தின் அளவை அதிகரித்துள்ளோம். பயனாளிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கநடவடிக்கைஎடுத்துள்ளோம். இந்தத் திட்டத்தில் சில குறைபாடுகள் இருக்கலாம். அந்தக் குறைகளை இந்த வருடம் சரி செய்து கொண்டு நாம் முன்னேற வேண்டும்.

குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு நாங்கள் வழங்கும் பணம் அனைத்தும், நாட்டின்பொருளாதாரத்தில் மீண்டும் சேர்க்கப்படுகிறது. ஏனெனில்அவர்கள் அந்த பணத்தை அன்றாட தேவைகளுக்காக செலவிடுகிறார்கள். அதன்படி இந்த ஆண்டு இந்தப் பணம் நாட்டின் பொருளாதாரத்தில் சேர்க்கப்படும். மேலும், அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரித்துள்ளோம். இதனால் தனியார் துறையிலும் சம்பள அதிகரிப்பு வழங்கப்படுகிறது. பெருந்தோட்டத் துறையினருக்கும் சம்பள அதிகரிப்ப வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்த சம்பள அதிகரிப்பின் பயனை பொருளாதாரம் பெறுகிறது.

கடந்த காலத்தில் அபிவிருத்தித் திட்டங்கள் நிறுத்தப்பட்டன. இதனால், ஒப்பந்ததாரர்கள் மற்றும் விநியோகத்தர்கள் நட்டத்தை எதிர்கொண்டனர். எனினும், அவர்களுக்கும் தற்போது நிலுவைப் பணம்செலுத்தப்பட்டுவருகிறது. இந்தப் பணம் மீண்டும் பொருளாதாரத்தில் சேரும்.

அத்துடன் நாங்கள் 'கந்துகர தசகய' எனும் மலையக தசாப்தம் என்ற திட்டத்தை ஆரம்பித்துள்ளோம். மலையகப் பகுதிகள் இன்னமும் முறையாக அபிவிருத்தி செய்யப்படவில்லை. அதற்கான பணத்தை வழங்க ஏற்பாடு செய்துள்ளோம். இந்தபணம்செலவழிக்கப்படும்போது, அதுநாட்டின்பொருளாதாரத்தில் சேர்க்கிறது. எனவே, ஆளும் தரப்பு வழங்கும் இந்தப் பணத்தை எல்லாம் முறையாகச் செலவிடவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். இந்தப் பணத்தை சம்பந்தப்பட்ட துறைகளுக்குப் பயன்படுத்த வேண்டும். அப்போது இந்தப் பணம் நாட்டின் பொருளாதாரத்தில் சேர்க்கப்படும்.

மக்களுக்கு இலவச நில உரிமை வழங்கும் 'உருமய' திட்டத்தை செயல்படுத்தியுள்ளோம். இதன்மூலம் மக்களின் நீண்டநாள் பிரச்சினைக்கு தீர்வு கிடைக்கும். அதன்படி முதற்கட்டமாக 10 இலட்சம் பேருக்கு காணி உரிமைவழங்குவதற்கானஅனைத்து ஏற்பாடுகளும்பூர்த்திசெய்யப்பட்டுள்ளன. பிரச்சினைகள் உள்ள இடங்களில், பிரச்சினைகளைத்தீர்த்து, பணிகளைச் செயல்படுத்தவேண்டும். மேலும், மக்கள் வசிக்கும் அடுக்குமாடி குடியிருப்புகளின்உரிமையைஅவர்களுக்கே வழங்கநடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளது.

தற்போதுள்ளபொருளாதாரத்தையே நாம் தொடர முடியாது. நாட்டை வங்குரோத்து நிலையில் இருந்து மீட்டெடுக்க ஆளும் தரப்பு தற்போது செயற்பட்டுவருகின்றது. நிலுவையில் உள்ள கடன்களுக்கு கால அவகாசம் கோரியுள்ளோம். இங்கு நமது ஏற்றுமதியைவிட இறக்குமதிகள் அதிகமாகஇருக்கிறது. இறக்குமதிக்கும் ஏற்றுமதிக்கும் இடையே உள்ள இடைவெளியைஈடுசெய்யஒவ்வொரு ஆண்டும் கடன் வாங்கவேண்டும். இதனைத்தவிர்க்க வேண்டுமாயின் திட்டமிட்டு செயல்படவேண்டும்.

கடந்தபொருளாதாரநெருக்கடியின் போது நாம் அனைவரும் பாதிக்கப்பட்டோம். அந்த நிலைமை மீண்டும் ஏற்பட்டால் நாம் எடுத்துள்ள இந்த முயற்சிகளினால் எந்த பயனும் கிடைக்காமல் போய்விடும். எனவே நாட்டின்பொருளாதாரத்தைவலுப்படுத்த நாம் அனைவரும் அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்.

நாங்கள் சுற்றுலாத் துறையை மேம்படுத்திவருகிறோம். இந்தடிசம்பர் மாதத்திற்குள் அதிகமான சுற்றுலாப் பயணிகள்நம்நாட்டிற்கு வருவார்கள் என்றுஎதிர்பார்க்கப்படுகிறது. மேற்கத்திய நாடுகளில்உள்ளபொருளாதாரத்தின்படி ஆடைத் தொழில் மீது பெரிய நம்பிக்கைவைக்கமுடியாது. எனவே விவசாயத்தில் கவனம் செலுத்த வேண்டும். நாம் சிங்கள மன்னர் காலத்திலிருந்து ஆங்கிலேயர் ஆட்சி முடியும்வரை விவசாயத்தில் ஈடுபட்ட நாடு. அப்போதுநமதுவிவசாயஏற்றுமதி வலுவாக இருந்தது. அந்த நிலைக்கு நாம் திரும்ப வேண்டும்.

விவசாயத்தைநவீனமயப்படுத்தும் முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளோம். அதற்காக26பிரதேசசெயலகங்களைத்தெரிவுசெய்துள்ளோம். கமநல சேவை அலுவகங்கள் விவசாய நவீனமயமாக்கல்அலுவலகங்களாக மாற்றப்படும். அனைத்து விவசாயத் துறைகளும் ஒரு அமைச்சின் கீழ் செயற்பட வேண்டும். மேலும், நெல் விளைச்சலைப்பெறதிட்டமிட்டுள்ளோம். விவசாய நவீனமயமாக்கல் திட்டம் எதிர்காலத்தில்அனைத்துபகுதிகளிலும் செயல்படுத்தப்பட உள்ளது.

இலங்கையில்உள்ள341பிரதேச செயலகங்களில் எத்தனை பிரதேச செயலகங்களில்இருந்துநாம்அந்நிய செலாவணிபெறுகின்றோம்என்பதை ஆராய்ந்துபார்க்கவேண்டும். எனவே ஒவ்வொரு பிரதேச செயலகத்திலும் நவீன விவசாய பொருளாதாரத்தை உருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். மேலும், தொழிற்பயிற்சிநிலையங்களில் இணைந்து, தொழிற்கல்லூரிகளை நிறுவி, தொழில்பயிற்சியைசீரமைக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

அடிப்படையில், சுற்றுலா மற்றும் விவசாய மேம்பாட்டுத்திட்டங்களை முன்னேற்றுவதற்கு நாங்கள் பணியாற்றி வருகிறோம். கடன் மறுசீரமைப்புத்திட்டத்திற்குப்பின்னர், வெளிநாட்டுமுதலீடுகளைப்பெற்றுபுதிய முதலீட்டுவலயங்களைஉருவாக்கத் திட்டமிட்டுள்ளோம். அதற்காக திருகோணமலை, அம்பாந்தோட்டை, இங்கிரிய, கண்டி, யாழ்ப்பாணம் உள்ளிட்ட பல பிரதேசங்களை அடையாளம் கண்டுள்ளோம். தென் மாகாணம் மற்றும் கிழக்கு மற்றும் மலையகம் ஆகியவற்றில் சுற்றுலாத்துறையை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மேலும்டிஜிட்டல்மற்றும்பசுமைப் பொருளாதாரத்தைநோக்கிச்செல்வதே எங்கள் நோக்கம். இந்த அனைத்து நடவடிக்கைகளுடனும் நாம் புதிய பொருளாதாரத்தை கட்டியெழுப்ப முடியும் என்றார்.

# எந்தவொரு நகரிலும் இனிமேல் சண்டியர்கள் இருக்கமுடியாது

## அமைச்சர் ரிரான் அலஸ் தெரிவிப்பு

எந்த நகரிலும் சண்டியர்கள் இருக்கமுடியாதுஎன்றுபொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்தார்.

வவுனியாவில்நடைபெற்றசமூக பாதுகாப்புக்குழுக்களைஉருவாக்கும் செயற்றிட்டநிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

பாதாள உலகக் குழுக்களை ஒழிக்கும் செயற்பாட்டையும், போதைப்பொருள் வியாபாரம், கடத்தல் உள்ளிட்ட அனைத்துச் செயற்பாடுகளையும் எந்த அழுத்தம் வந்தாலும் நிறுத்தப்போவதில்லை.

எந்தநகரங்களிலும்சண்டியர்கள் இருக்கமுடியாது. அவர்களேபின்னர் ரி--56 துப்பாக்கிகளுடன் கொலைச் சம்பங்களை அரங்கேற்றுகின்றனர். அவர்களின் சுதந்திரமான செயற்பாடுகளுக்கு இடமளிக்க முடியாது.

இந்தப் பகுதிகளிலும் அவ்வாறானவர்கள் இருப்பதாக நான் கருதுகின்றேன். அவர்கள்தொடர்பிலான தகவல்களைப் பெற்றுத்தாருங்கள். பாதாள உலகக் குழுவினரை ஒழிக்கும் செயற்பாட்டை சிறந்த முறையில் அல்லது மோசமான முறையில் மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளோம்.

போர் காரணமாக இந்தப்பகுதி மக்கள் எவ்வளவு சிரமங்களை எதிர்கொண்டார்கள் என்பதை நான் அறிவேன். 2002ஆம்ஆண்டிலிருந்து 2005ஆம்ஆண்டுவரையில்அடிக்கடி நான் இந்தப்பகுதிக்கு வந்துள்ளேன்.

அக்காலத்தில் இந்தப்பகுதியில் கையடக்கத் தொலைபேசிகள் இருக்கவில்லை. அச்சமயத்தில்நானே டயலக்குடன்இணைந்துகையடக்கத் தொலைபேசிகளைஇந்தப்பகுதிகளுக்கு அறிமுகப்படுத்தினேன்.

அச்செயற்பாடுகளை முன்னெடுத்தபோது நான் விடுதலைப் புலிகளுக்கு பணம் கொடுத்ததாக கூறி அப்போதையஆளும்தரப்புஎன்னைச் சிறையில் அடைத்தது. எனினும் அதற்காக நான் மக்கள் சேவையில் இருந்து பின்வாங்கவில்லை. நான் முன்னெடுக்கவேண்டியஅனைத்து சேவைகளையும்தொடர்ந்தேன். நான் பொலிஸுக்கு பொறுப்பான அமைச்சராக வருவேன் என்று அவ்வேளையில் எவரும் நினைக்கவில்லை என்றார்.



# புத்தளம் நகரின் கல்வி மேம்பாட்டுக்காக தன்னை முற்றாகக அர்ப்பணித்த பாயிஸ்

## எஸ்.எச்.எம்.நியாஸ் பெருமிதம்



(எம்.எச்.எம். சியாஜ்)

'புத்தளம் நகரின் கல்வி மேம்பாட்டிற்கு தன்னை முழுமையாக அர்ப்பணித்த ஒரு தலைவன் புத்தளம் நகர சபையின் முன்னாள் தலைவரும், முன்னாள் பிரதி அமைச்சருமான கே.ஏ.பாயிஸ்' ஆவார் என அவரின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புகளின் தொகுப்பான 'முதற்குடி மகன்' நூல் வெளியீட்டு விழாவில் அதிதிகளில் ஒருவராக கலந்து கொண்டு உரையாற்றிய வட மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எஸ்.எச்.எம்.நியாஸ் தெரிவித்தார்.

மறைந்த முன்னாள் கால் நடை வளத்துறை பிரதி அமைச்சரும், புத்தளம் நகர பிதாவும், கவிஞருமான மர்ஹூம் கே.ஏ. பாயிஸின் வாழ்க்கை வரலாற்றுக் குறிப்புக்களின் தொகுப்பாக அவரின் பிரத்தியேக செயலாளரான எழுத்தாளர் எம்.எஸ் அப்பாஸ் எழுதிய 'முதற்குடி மகன்' என்ற நூல் வெளியீட்டு விழா அண்மையில் புத்தளம் கே.ஏ.பாயிஸ் ஞாபகார்த்த கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

நூலாசிரியர் எம்.எஸ்.எம்.அப்பாஸின் புதல்வி மதீஹா அப்பாஸ் தலைமையில் நடைபெற்ற இந்நூல் வெளியீட்டு விழாவில் புத்தளம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலிசப்ரி ரஹீம், முன்னாள் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஐ.எம்.இல்யாஸ், வடமேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் எம்.டீ.எம்.தாஹிர், புத்தளம் நகர சபையின் முன்னாள் தலைவர் எம்.எஸ்.எம்.ரபீக், புத்தளம் வலய கல்வி பணிமனையின் ஓய்வு நிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் இஸட்.ஏ.சன்ஹீர், ஓய்வுபெற்ற பிரதி தேர்தல் ஆணையாளர் முஹம்மது நபீல் உள்ளிட்ட கல்வியியலாளர்கள், சட்டத்தரணிகள், வைத்தியர்கள், அரசியல் பிரமுகர்கள், மர்ஹூம் கே.ஏ.பாயிஸின் உறவினர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இதன் போது முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எஸ்.எச்.எம்.நியாஸால் நூலாசிரியர் எம்.எஸ்.எம்.அப்பாஸ் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

நூல் அறிமுக உரையை ஓய்வுநிலை பிரதிக் கல்விப்பணிப்பாளர் இஸட்.ஏ.சன்ஹீரும், ஏற்புரையை நூலாசிரியர் எம்.எஸ்.எம்.அப்பாஸூம் வழங்கினர். நூலிற்கான அட்டைப்படத்தை புத்தளம் வலயக் கல்விப்பணிமனையின் சித்திரப் பாடத்துக்கான ஆசிரிய ஆலோசகரும், நாடறிந்த ஓவியருமான எம்.எம்.முஹம்மது வரைந்திருந்தார் .

முன்னாள் மாகாண சபை உறுப்பினர் எம்.டீ.எம்.தாஹிர், முன்னாள் நகர பிதா எம்.எஸ்.எம்.ரபீக், இந்து மத்திய கல்லூரியின் முன்னாள் அதிபர் எஸ்.நாகராஜா, நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீமின் சகோதரர் டாக்டர் ஹபீஸ் ஆகியோரும் இங்கு உரையாற்றினர்.

எஸ்.எச்.எம்.நியாஸ் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில் -

வெறுமனே வீதி அபிவிருத்திகளை மேற்கொள்வதும், வீதிவிளக்குகளை பொருத்துவதுமே நகர சபையின் கடமையென்ற மடைமையை உடைத்தெறிந்து நகர அபிவிருத்திகளையும், கல்வியிலே புரட்சியையும் நகர சபையால் ஏற்படுத்த முடியும் என்பதை உணர்வு பூர்வமாக நிரூபித்தவர் மர்ஹூம் கே.ஏ.பாயிஸ்.

புத்தளத்தில் திறந்த பல்கலைக்கழகம், ஜனாதிபதி விஞ்ஞான கல்லூரி, சாஹிரா ஆரம்ப பாடசாலை, செய்னப் ஆரம்ப பாடசாலை போன்றவற்றைத் தோற்றுவிக்க கே.ஏ.பாயிஸோடு அவரின் செயலாளராக கடமையாற்றிய எம்.எஸ்.எம்.அப்பாஸ் இந்நூலில் வெளியிடுவதை எண்ணி புளகாங்கிதம் அடைகிறேன் எனத் தெரிவித்தார்.

நூலாசிரியரின் மருமகன் இலங்கை வானொலி தென்றல் அலைவரிசை அறிவிப்பாளர் எம்.எஸ்.எம். பஹீர்தீன் நிகழ்வை சுவைபட தொகுத்து வழங்கினார்.(05)

# சன்சைன் ஹோல்டிங் நிகழ்த்திய சர்வதேச பெண்கள் தின நிகழ்வு!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சர்வதேச மகளிர் தினத்தை கொண்டாடும் வகையில், சன்ஷைன் ஹோல்டிங்ஸ் அதன் பெண்கள் அதிகாரமளிக்கும் முன்முயற்சியை அண்மையில் தலை நகரில் அனுஷ்டித்தது.

நோக்கிய பயணத்தின் தொடக்கத்தைக் குறித்தது.

பணியாற்றும் இடத்தில் சிறந்த பெண் பிரதிநிதித்துவத்தை வளர்ப்பதற்கு கதையை மாற்றுவதில் கவனம் செலுத்துவதன் மூலம், தடைகளை



இது எமது பெண் சமூகத்தில் தைரியத்தை தூண்டுவதற்கும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் பெண்களின் அர்ப்பணிப்பின் உருவகமாகும்.

இந்த தருணங்கள் பெண்களின் திறமைகளை வெளிக்காட்டும் திட்டத்தின் ஆரம்பத்தை பிரதிபலிக்கின்றன.

எழுச்சியூட்டும் உரைகள் மற்றும் நுண்ணறிவுமிக்க குழுவிவாதங்களால் நிரப்பப்பட்ட இந்த வெளியீட்டு நிகழ்வு, பெண்களுக்கு அதிகாரம் அளிப்பதை உடைத்து, உள்ளடக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கத்தைக் கொண்டுள்ளது.(05)



# புதிய கல்வி எல்லைகளை தொடும் வடமேற்கு மாகாணச் சிறார்கள்



வடமேற்கு மாகாணத்தில் உள்ள தமிழ் முஸ்லிம் கிறிஸ்தவ பாடசாலைகள் பௌதிக மற்றும் மனித வளம் குறைவானதாகவும் அதன்காரணமாக கல்வி மேம்பாடு குறைவாக காணப்படுகின்றன, இவ்வகையில் 75இற்கு அதிகமான மாணவர்களைக்கொண்ட பாடசாலை மாணவர்களுக்கு டிஜிற்றல் ஸ்மார்ட் போர்ட் ஊடாக கற்பிக்கும் முறைமையை வழங்கி மனிதவள இழப்பை ஈடு செய்ய ஜஎம்எச்ஓ நிறுவனமும் ரத்னம் பவுண்டேசன் நிறுவனமும் இணைந்து வலய கல்விப ;பகுதியினரின் ஒத்துழைப்புடன் முன்னெடுத்த செயற்றிட்டம் வெற்றிகரமாகவும் முன்னேற்றகரமாகவும் இருப்பதை அவதானிக்க முடிந்தது.

இம்மாதம் முதலாம் திகதி புத்தளம் நகரில் இருந்து ஏறத்தாள 50 கிலோ மீற்றர் தொலைவில் இருக்கும் கல்பிட்டியில் உள்ள அரசினர் றோமன் கத்தோலிக்க தமிழ் மகாவித்தியாலயத்திற்கு ஜஎம்எச்ஓ வதிவிட பிரதிநிதி முத்து இராதாகிருஷ்ணன் உள்ளிட்ட குழு விஜயம் செய்தது.

இந்தப் பாடசாலையில் 320 மாணவர்கள் கல்விகற்கின்றனர். இப்பாடசாலை மிகவும் பின்னடைவான கல்வி பற்றிய அடிப்படைகள் குறைந்த சமூகத்தை பிரதிபலிக்கும் சூழலில் இருக்கின்றது. மாணவர் வரவு மிக குறைவு. இத்தகைய சவால்களைக்கொண்ட இப்பாடசாலை செயற் திட்டத்தில் உட்படுத்தப்பட்டு இப்பாடசாலைக்கு

ஜஎம்எச்ஓ-யுஎஸ்ஏ மற்றும் ரத்னம் பவுண்டேசன் - யுகே ஆகிய நிறுவனங்களால் வழங்கப்பட்ட சிமாட் போட் கற்றல் தொகுதி உத்தியோகபூர்வமாக அன்று திறந்து வைக்கப்பட்டது.

அதுமட்டுமல்லாது ஆசிரியர்களுக்கு முன்னரே வழங்கப்பட்ட பயிற்சியின்காரணமாக மாணவர்களுக்கு சிமாட் போட் ஊடாக கற்பித்து மாணவர்களும் சிமாட் போட்டைக் கையாளப்பழக்கப் பட்டி





ருந்தனர். இதனை ஆசிரியர்கள் கற்பித்தபோது மாணவர்களின் ஈடுபாட்டையும் உற்சாகத்தையும் பார்த்து விளங்கக்கூடியதாக இருந்தது.

சிமாட் போட் மூலமாக மாணவர்கள் கற்றபோது அவர்கள் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவில்லை. ஒவ்வொரு மாணவனும் செயற்படுவதற்கு முண்டியடித்தனர். உற்சாகமாகவும் ஓர் ஆரோக்கியமான வகுப்பாகவும் இயங்கியது. (05)

# ஆங்கில ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பாசறை குருவிட்டவில்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

சப்ரகமுவ மாகாணத்தில் குருவிட்டவில் உள்ள மெனரெபிட்டிய பயிற்சி நிலையத்தில் ஆசிரியர்கள்



சிலர் மகிழ்ச்சிகரமான முறையில் பங்கேற்ற பயிற்சிப் பட்டறையொன்று அண்மையில் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பாடசாலை வகுப்பறைகளில் ஆங்கிலமொழியின் கற்பித்தல் தரத்தை உயர்த்துவதற்கும் அதற்கு உதவுவதற்கான, ஆசிரியர்களின் தொழில்சார் வளர்ச்சியை வலுப்படுத்தும் நோக்கமாக இந்த பயிற்சிப் பாசறை ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில் சப்ரகமுவ மாகாணத்திலுள்ள



பாடசாலை ஆங்கில ஆசிரியர்கள் மற்றும் வளவாளர்கள் கலந்து கொண்டனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

### வெடுக்குநாறிமலையில் சிவாராத்தியன்று நடந்த

# பொலிஸ் அடாவடியைக் கண்டித்து வவுனியாவில் திரண்டனர் மக்கள்

## கைது செய்யப்பட்டவர்களின் விடுதலைக்கும் வலியுறுத்து



வெடுக்குநாறி மலையில் கைது செய்யப்பட்ட பூசகர் உள்ளிட்ட 8 பேரையும்விடுவிக்கக் கோரியும் பொலிஸ் அடாவடியைக் கண்டித்தும் வவுனியாவில் ஆர்ப்பாட்டப் பேரணி வெடுக்குநாறி மலை ஆதி சிவன் ஆலயத்தில் கைது செய்யப்பட்டபூசகர்உள்ளிட்ட8பேரையும்விடுவிக்ககோரியும், பொலிஸாரின் அடாவடியைக் கண்டித்தும் வவுனியாவில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நேற்று முன்னெடுக்கப்பட்டது.

வெடுக்குநாறிமலையில் கைது செய்யப்பட்டர்களின் விடுதலையை வலியுறுத்தி யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்ட வாகனப் பேரணியானது வவுனியா பழைய பேருந்து நிலையத்தை வந்தடைந்ததைத் தொடர்ந்து ஆர்ப்பாட்டப் பேரணி தொடங்கியது.

கைது செய்யப்பட்டவர்களின் உறவுகளின் ஏற்பாட்டில் இடம்பெற்ற இப் பேரணியானது வவுனியா, பழைய பேரூந்து நிலையத்தில்தொடங்கிஅங்கிருந்துமணிக்கூட்டுகோபுரசந்தியை அடைந்து, பசார் வீதியூடாகச் சென்று ஹொரவப்பொத்தானை வீதியை அடைந்து அங்கு வைத்தியசாலை சுற்றுவட்ட வீதியில் அமைந்துள்ள தொல்பொருள் திணைக்களத்தை முற்றுகையிட்டு கோசம் எழுப்பிய ஆர்ப்பாட்டக்காரார்கள், பின்னர் கண்டி வீதி ஊடாகச் சென்று வவுனியா சிறைச்சாலை முன்றலில் தமது போராட்டத்தை நிறுத்தினர்.

ஆர்ப்பாட்டப் பேரணியில் ஈடுபட்டவர்கள் ' பொலிஸ் அராஜகம் ஒழிக, வெடுக்குநாறி எங்கள் சொத்து, கைது செய்யப்பட்டவர்களை விடுதலை செய், வழிபாட்டு உரிமையை தடுக்காதே, சிவ வழிபாட்டை தடை செய்யாதே, வடக்கு - கிழக்கு தமிழர் தாயகம், இராணுவமே வெளியேறு, பொய் வழக்குப் போடாதே, பௌத்த மயமாக்கலை உடனே நிறுத்து" என எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியிருந்ததுடன் கோசங்களையும் எழுப்பினர்.

சிவராத்திரி வழிபாட்டை குழப்பி பொலிசார் அடாவடியைக் கட்டவிழ்த்து கைது செய்யப்பட்டு பொய் குற்றச்சாட்டின் கீழ் சிறையில் இருக்கும் பூசகர் உள்ளிட்ட 8 பேரும் விடுவிக் கப்படவேண்டும். அவர்களின் விடுதலைக்காக நாம் தொர்ந்தும் போராடுவோம் என போராட்டக்காரர்கள் அங்கு அறிவித்தனர்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டப் பேரணியில் தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், நல்லூர் சிவகுரு ஆதீனத் தலைவர் வேலன் சுவாமிகள், சமாதானத்திற்கும் நல்லிணக்கத்திற்குமான பணியகத்தின் மதகுரு அருட்தந்தை ரமேஸ், கிறிஸ்தவ மதகுருமார், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர்.

(100)





















காலைக்கதிர் Kalaikkathir

# யாழ்.இந்திய துணைத்தூதரக அனுசரணையில் சித்த மருத்துவ முகாம் நேற்று கிளிநொச்சியில்

யாழ்.இந்திய துணைத்தூதரகத்தின் அனுசரணையில் சித்த மருத்துவ முகாம் ஒன்று நேற்று (சனிக்கிழமை) கிளிநொச்சியில் இடம்பெற்றது.

யாழ்இந்திய துணைத்தூதரகமும், வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களமும் இணைந்து ஏற்பாடு செய்த மேற்படி மருத்துவ முகாம் சாந்தபுரம் கலைமகள் வித்தியாலயத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ்.இந்திய துணைத்தூதரக உயர் அதிகாரி மனோஜ்குமார் கலந்து கொண்டார்.

இந்த மருத்துவ முகாமில் பரிசோதிக்கப்பட்டு இலவசமாக மருந்துகள் வழங்கப்பட்டதுடன், பரிசோதனைகளும், ஆலோசனைகளும் இடம்பெற்றன.

யாழ்.இந்திய துணைத் தூதரகத்தால் 2022 ஆண்டு முதல் ஆரோக்கியமான வாழ்க்கைக்கு அனைவருக்கும் சித்தா மருத்துவம் என்ற கருப்பொருளில் வட மாகாண சுதேச மருத்துவ திணைக்களத்துடன் இணைத்து வடமாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் சித்த மருத்துவ முகாம்களை ஏற்பாடு செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்த வகையில் கிளிநொச்சி மாவட்டத்தில் இவ் மருத்துவ முகாம் 2 ஆவது சித்த மருத்துவ முகாமாகும். 2022 ஆம் ஆண்டு கிளிநொச்சி நகரில் பாரதிபுரம் என்ற பிரதேசத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட சித்த மருத்துவ முகாமில் கிட்டதட்ட 250 நோயாளிகள் பங்கேற்று சிகிச்சை பெற்றனர், மேலும் வட மாகாணம் முழுவதிலும் சுமார் 2000 பேர் இதுவரை சிகிசை பெற்றுள்ளனர்.

குறிப்பாக இவ் முகாம் நமது பண்டைய தமிழ் மருத்துவ முறைகள் பற்றிய ஆழமான அறிவைப் புதுப்பிக்கவும் பண்டைய மருத்துவ முறையான சித்த மருத்துவ சேவையைப் பெறுவதற்காக இந்திய அரசாங்கத்தின் ஆயுஷ் அமைச்சகத்தால் வழக்கம்படும் நிதி அனுசரணை மூலம் ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. (05-113)

# பிரதி பொலிஸ் மா அதிபர்கள் உட்பட 18 பொலிஸ் அதிகாரிகளுக்கு மாற்றம்

சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் உட்பட 18 சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உடனடியாக அமுலுக்குவரும்வகையில்இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்தஇடமாற்றங்கள்தேசியபொலிஸ் ஆணைக்குழுவின் தீர்மானத்திற்கு அமைய பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோனின் பணிப்புரையின் கீழ் வழங்கப்பட்டுள்ளன.

இடமாற்றம் செய்யப்பட்ட அதிகாரிகளில் 8 சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர்கள், ஒருபிரதிப்பொலிஸ்மாஅதிபர் , 8 மூத்த பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் ஒரு பொலிஸ் அத்தியட்சகர் ஆகியோர் அடங்குவர்.

கல்கிசைபொலிஸ்பிரிவின்பொறுப்பதிகாரியாக கடமையாற்றிய எஸ்எஸ்பி இ.எம்.எம்.எஸ். தெகிதெனிய, குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளராக மாற்றப்பட்டுள்ளார்.

இந்நிலையில், தற்போதைய குற்றப் புலனாய்வு திணைக்களத்தின் பணிப்பாளர் எஸ்எஸ்பி கே.ஜி.ஏ.கே. பியசேகர களுத்துறை பொலிஸ் பிரிவிற்கு தலைமை தாங்குவதற்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். (05)

# பொதுச் சுகாதாரப் பரிசோதகர் படுகொலை குறித்து எந்தத் தகவலும் கிடைக்கவில்லை

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் கைவிரிப்பு

கரந்தெனிய பொதுச்சுகாதார பரிசோதகரான ரொசான் குமார சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பில் எவ்வித தகவலும் இதுவரை கிடைக்கவில்லையென பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் தெரிவித்துள்ளார்.

இந்த துப்பாக்கிச் சூட்டை மேற்கொண்ட சந்தேகநபர்களை கைது செய்வது தொடர்பாக மேலதிகவிசாரணைகளைமேற்கொண்டுள்ளதாகவும் இதற்கு புலனாய்வு அதிகாரிகள் அடங்கிய குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்தார்.

கரந்தெனிய பொதுச்சுகாதார பரிசோதகரான ரொசான் குமாரவை,எல்பிடிய திவிதுருகமவில் உள்ள அவரது வீட்டில் வைத்து பெப்ரவரி மாதம் 26 ஆம் திகதி மோட்டார் சைக்கிளில் சென்ற இரு துப்பாக்கிதாரிகள் சுட்டுக்கொலை செய்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.



இதேவேளை இக்கொலைச்சம்பவம்தொடர்பான தகவல்கள் கிடைத்தால் உடனடியாக தமக்கு அறிவிக்குமாறு பொலிஸார் பொது மக்களிடம் வேண்டுகோள்விடுத்துள்ளமைகுறிப்பிடத்தக்கது.(05)

# இனம்தெரியாத நபர்களால் மலர்ச்சாலைமீது தாக்குதல்



கிளிநொச்சி வைத்தியசாலைக்கு முன்பாக உள்ள மலர்ச்சாலை ஒன்றில் வெள்ளிக்கிழமை மாலை 6.30 மணியளவில் இனம் தெரியாத நபர்களால் தாக்கப்பட்டு மலர்ச்சாலையின் உரிமையாளரின் மனைவியும்வாள்களால்வெட்டப்பட்டுவைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றார்கள். (05-113)

# அதிக வெப்பநிலை காரணமாக தோல் நோய் ஏற்படும் அபாயம்

நாட்டில் தற்போது நிலவும் அதிக வெப்ப நிலையுடனானகாலநிலைகாரணமாகதோல்நோய்கள் ஏற்படக்கூடிய வாய்ப்புக்கள் அதிகம் காணப்படுவதாக வைத்திய நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் வெள்ளிக்கிழமை குருணாகல், இரத்தினபுரி, அநுராதபுரம் ஆகிய மாவட்டங்களில் அதிகவெப்பநிலையுடனான காலநிலை காணப்பட்டது.

நமதுசருமத்திற்குநேரடியாகபடும்அதிகளவிலான சூரிய ஒளி காரணமாக இவ்வாறான நோய்கள் ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது.

தோல் எரிதல் , தோலில் வெள்ளைப் புள்ளிகள் தோண்றுதல்,தோல்அரிப்பு, வியர்வையால்தோலில் ஏற்படும் கொப்புளங்கள் , தழும்புகள் போன்ற மாற்றங்கள் இந்த நோய்க்கான அறிகுறிகளாகும்.

அதிக வெப்ப நிலை காரணமாக தோல் ஒவ்வாமைஏற்படுவதும்தற்போது அதிகரித்துள்ளதாக தெரியவந்துள்ளது.

இந்த நோய்கள் குழந்தைகளிடையே ஏற்படுவதற்கானவாய்ப்புஅதிகம்காணப்படுவதாகவும் மேற்குறிப்பிட்ட நோய் அறிகுறிகள் காணப்பட்டால் உடனடியாக வைத்திய ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளமாறும் தோல் நோய் வைத்திய நிபுணர் தெரிவித்துள்ளார்.

(05)

# கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் 8 கைபேசிகள், 11 சிம் அட்டைகள் மீட்பு!

கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையில் மேற்கொள்ளப்பட்டவிசேடசோதனைநடவடிக்கையின் போது கையடக்கத் தொலைபேசிகள் மற்றும் சிம் அட்டைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

சிறைச்சாலைகள் புலனாய்வு பிரிவினரால் கொழும்பு விளக்கமறியல் சிறைச்சாலையின் ஜி1 பிரிவில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின் போதே 8 கையடக்கத் தொலைபேசிகளும் 11 சிம் அட்டைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட கையடக்கத் தொலைபேசிகளில் மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான கையடக்கத் தொலைபேசி ஒனறும் காணப்பட்டுள்ளது. ,துதொடர்பிலான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றனஎனசிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

(05)

# மல்வத்து ஹிரிபிட்டியவில் தேரர் கொலை: போலி நீல மாணிக்கக் கல்லே காரணமாம்

மல்வத்துஹிரிபிட்டிய கஹடான ஸ்ரீஞானராம விகாரையின்தேரரைசுட்டுக்கொன்றுஅவரிடமிருந்து கொள்ளையிட்டுச் சென்ற நீல மாணிக்கக் கல் போலியானது என பொலிஸாரின் விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

உயிரிழந்த தேரரிடம் இருந்த நீல மாணிக்கக் கல்லை கொள்ளையிடுவதற்காகவே இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

தேரரை கொன்ற கும்பலால் கொள்ளையிட்டுச் செல்லப்பட்ட நீல மாணிக்கக் கல் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ள நிலையில் அந்த நீல மாணிக்கக் கல் போலியானது என விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளது.

டுபாயில் வசிக்கும் அத்துருகிரிய லெடா மற்றும் பத்தரமுல்லை பன்ட்டி ஆகியோரின் தலைமையில் 4 சந்தேக நபர்கள் கொண்ட கும்பலால் இந்த துப்பாக்கி சூடு நடத்தப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் தொடர்பில் 7 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ள நிலையில் இந்த துப்பாக்கி சூடு சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் கடந்த 11 ஆம் திகதி பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.(05)

# பசுமை அமைதி விருதுகள் விழா இன்று வீரசிங்கம் மண்டபத்தில்




தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் 2023ஆம் ஆண்டுக்கான பசுமைஅமைதிவிருதுகளைவழங்கும் பரிசளிப்பு விழா இன்று 17 ஆம் திகதி (ஞாயிற்றுக்கிழமை) யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

இந்த விழாவில் கடந்த ஆண்டு தமிழ்த்தேசியப்பசுமை இயக்கத்தால் அகில இலங்கை ரீதியாக நடத்தப்பட்ட சூழல் பொதுஅறிவுப் பரீட்சையில் வெற்றிபெற்ற மாணவர்கள் சூழலியல் ஆசான் க.சி.குகதாசன் ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதுகளும், 2023 ஆம் ஆண்டின் சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளர் தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்தப் பசுமை அமைதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேலும், இவ்விழாவில் 2023 ஆம் ஆண்டில் மாணவர்களிடையேநடத்தப்பட்ட வீட்டுத்தோட்டப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு மாணாக்கஉழவர்மதிப்பளிப்பும், தாவரங்களை அடையாளம் காணும் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குதாவராவதானி மதிப்பளிப்பும்இடம்பெறவுள்ளது.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள இந்த விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா அவர்கள் கலந்துகொள் ளவுள்ளார்.

சிறப்பு விருந்தி னர்களாக வடமாகாணக் கல்வித் திணைக்களத்தின் பணிப்பாளர் தி. ஜோன் குயின்ரஸ்ும், கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.எஸ்.ஏ. கலீஸ் அவர்களும் கலந்துகொள்ள வுள்ளார்கள்.

இலங்கையில் சுற்றுச்சூழல் சார்ந்து வழங்கப்பட்டு வரும் விருதுகளில் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின்பசுமைஅமைதிவிருதுகள் முன்னிலை விருதுகளில் ஒன்றாகக் கருதப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# யாழ். பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா!

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதியின் மூன்றாவது நாள் அமர்வுகள் இன்று காலை பல்கலைக்கழக உள்ளக விளையாட்டரங்கில் ஆரம்பமாகின.

கடந்த 14 ஆம் திகதி, வியாழக்கிழமை பல்கலைக்கழக வேந்தர் வாழ்நாள் பேராசிரியர் சி. பத்மநாதன் தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகிய இந்தப் பட்டமளிப்பு விழாவில் 2 ஆயிரத்து 873 பேருக்குப் பட்டங்கள் வழங்கப்படவுள்ளன. அத்துடன் 46 தங்கப் பதக்கங்கள், 09 புலமைப் பரிசில்கள் மற்றும் 48 பரிசில்களும் வழங்கப்படுகின்றன.

இன்று மாலை இடம்பெறவுள்ள ஒன்பதாவது அமர்வுடன் 38ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் முதலாவது பகுதி நிறைவுபெறவுள்ளது.























காலைக்கதிர் Kalaikkathir

# தனியார் பஸ்ஸில் பணப்பையை திருடிய நடத்துனரை நையப்புடைத்து பொலிஸிடம் ஒப்படைத்த பயணிகள்

மொரட்டுவை மற்றும் புறக்கோட்டைக்கு இடையிலான இலக்கம் 101 பயணிகள் பஸ்ஸில் பணப்பையை திருடிய குற்றச்சாட்டில் பஸ் நடத்துநர் கைது செய்யப்பட்டுள்ளார்.

பயணியொருவரின்பணப்பையைபஸ்நடத்துநர்திருடியதை மற்றையபயணியொருவர்கண்டுதெரியப்படுத்தியதைஅடுத்து நடத்துநரை பயணிகள் நையப்புடைத்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளார்கள்.

நடத்துநர்போதைப்பொருள்பாவனைக்குஅடிமையானவர் எனவும், பயணிகளின் பணம் மற்றும் பெறுமதியான பொருள்களைக் கொள்ளையடிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார் எனப் பொலிஸாரின் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மொரட்டுவை நோக்கி பயணித்த கம்பஹா பகுதியைச் சேர்ந்த பயணியின்பணப்பையேஇவ்வாறுதிருடப்பட்டுள்ளது.

இதுபோன்றமுன்புஇடம்பெற்றசம்பவங்களில்நடத்துநருக்கு தொடர்பு இருக்கலாம் என சந்தேகிக்கிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (05)

# முன்பள்ளி மாணவருக்கு சீருடை மற்றும் அ.அட்டை



(எஸ்.அஷ்ரப்கான்)

சாய்ந்தமருதில் உள்ள பிரபல முன்பள்ளியான பிர்லியன்ட் கல்லூரியின் மாணவர் சீருடை மற்றும் அடையாள அட்டை வழங்கும் நிகழ்வு நேற்று (சனிக்கிழமை) சாய்ந்தமருது அல்-ஜலால் வித்தியாலய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண முன்பள்ளி பணியகத்தில் பதிவு செய்யப்பட்டு இயங்கிவரும் இம்முன்பள்ளி, தமது 10 ஆண்டு நிறைவையொட்டி வெளியிடும் புதிய சீருடை மற்றும் மாணவர் அடையாள அட்டைகள் சாதாரணதரம், உயர்தரம் ஆகிய பிரிவுகளில் கல்வி பயிலும் 183 மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது.

அம்பாறை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஐ.எல்.எம்.றிபாஸ் இந்நிகழ்வின்பிரதமஅதிதியாககலந்துகொண்டதுடன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் தாய் சேய் நலன் பேணல் பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் எம்.எச்.றிஸ்பின் கௌரவ அதிதியாவும் கலந்து கொண்டார்.

பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் புலனாய்வு உத்தியோகத்தர் இஸட்.எம்.ஸாஜித், சாய்ந்தமருது மக்கள் வங்கி உதவி முகாமையாளர் ஏ.ஆர்.றிஸ்வான் முகம்மட், கல்முனை பிரதேச செயலக முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எம்.ஆயிஷா மற்றும் கல்முனை மெற்றோபொலிட்டன் கல்லூரியின் கணக்காளர் எஸ்.லியாக்கத்அலிஆகியோர்சிறப்புவிருந்தினர்களாக கலந்து சிறப்பித்தனர்.

இதன்போது, 'சிறுவர் உளவியல்' எனும் தலைப்பில் வைத்தியர் றிபாஸ் மற்றும் 'சிறுவர் போசாக்கு' தலைப்பில் வைத்தியர் றிஸ்பின், 'முன்பள்ளி கல்வியில் பெற்றோரின் வகிபாகம்' தலைப்பில்ஏ.எம்.ஆயிஷா,'சேமிப்பின்முக்கியத்துவம்' தலைப்பில் ஏ.ஆர்.றிஸ்வான் முகம்மட் ஆகியோரால் பெற்றோருக்கான விழிப்புணர்வு உரைகளும் இடம்பெற்றமை விஷேட அம்சமாகும்.(05)

# கடற்கரையைச் சுத்தமாக வைத்திருக்க புதிய செயலி



கடற்கரைகளில் கழிவு முகாமைத்துவத்திற்கு பயன்படுத்தக்கூடிய கைபேசிசெயலிஅறிமுகம்தொடர்பான கலந்துரையாடல் தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும்ஜனாதிபதிபணிக்குழாம் பிரதானியுமானசாகலரத்நாயக்கதலைமையில் வெள்ளிக்கிழமை ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்றது.

கடலோரமற்றும்கடல்சார்சூழலின் நிலையான வளர்ச்சியில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள்மற்றும்அமைப்புகளை முறையாகஒருங்கிணைத்து, கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபையின் தலையீட்டுடன் இந்த கைபேசி செயலி அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

நிலைபேறான கடல் மற்றும் கரையோரவலயத்தைஉறுதிசெய்யும் பொறுப்பில் ஒப்படைக்கப்பட்டுள்ள அனைத்து நிறுவனங்களும் சமுத்திரம் மற்றும் கரையோரத்தின் தூய்மையைப் பேணுவதற்கு அர்ப்பணிப்புடன் செயற்பட வேண்டும்எனசுட்டிக்காட்டியசாகலரத்நாயக்க, அந்த செயற்பாடுகளை இலகுபடுத்துவதற்கு இந்த புதிய செயலி உதவும் எனவும் குறிப்பிட்டார்.

கரையோரத் தூய்மைத் திட்டங்கள் மற்றும் கரையோரத் தூய்மையைப்பேணுதல்தொடர்பாக தற்போது நடைமுறைப்படுத்தப்படும் கல்வி மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்களை விரிவுபடுத்த வேண்டியதன் அவசியத்தையும் இதன்போது சுட்டிக்காட்டிய சாகல ரத்நாயக்க, கடலோர பகுதிகளில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் அரசாங்கத்தின் திட்டத்திற்கு இது நல்ல பங்களிப்பாக அமையும். - என்றார்.

ஆறுகள் மற்றும் கால்வாய்களில் இருந்து வெளியேறும் கழிவுகள் மற்றும் கழிவுநீர் மற்றும் கழிவு நீர் நீண்ட வெளியேற்ற குழாய்கள் மூலம் வெளியேற்றப்படுவதாலும் மீன்பிடித் துறைமுகங்கள் மற்றும் பிற கடல் நடவடிக்கைகள் மூலம் கடற்கரை மற்றும் கடல் வளங்கள் கடுமையாக மாசுபடுவதாக கடல்சார் சூழல் பாதுகாப்பு அதிகார சபை சுட்டிக்காட்டியது.

பல்வேறு அரச மற்றும் தனியார் நிறுவனங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலையீட்டுடன் துப்புரவுப்பணிகள்மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டதுடன், இந்த தொலைபேசிசெயலியைஇப்பணியின் சரியான ஒருங்கிணைப்புக்கு பயன்படுத்தஎதிர்பார்க்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

சுற்றாடல் அமைச்சின் செயலாளர் பிரபாத் சந்திரகீர்த்தி, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் டபிள்யூ.எஸ். சத்யானந்த உள்ளிட்ட அரச அதிகாரிகள், கடற்படைத் தளபதி, பொலிஸ் மா அதிபர் உட்பட பாதுகாப்புப் பிரிவின் தலைவர்கள்மற்றும்அரசசார்பற்றநிறுவனங்களின் பிரதிநிதிகளும் இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டனர்.(05)

# போரால் பாதிக்கப்பட்ட கிராமத்தில் இலவச மேலதிக பயிற்சி வகுப்புகள்

## சத்துணவும் வழங்கப்பட்டது



(கிண்ணியா நிருபர்)

திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பிரதேச பிரிவில் உள்ள பாட்டாளி புரம் கிராமத்தில் கணினி பயிற்சி நிலையம் திறந்துவைக்கப்பட்டது.

வறுமையால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நலன் கருதியே கணிணி பயிற்சி நிலையமும் சத்துணவு வழங்கும் நிகழ்ச்சி திட்டமும் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

போரால் பாதிக்கப்பட்ட மாணவர்களின் நலன் கருதி பயிற்சி வகுப்புகளும் சத்துணவு வழங்குதலும் 'கல்வியை கண்கள் எனும் திட்டத்தினூடாக' ஆரம்பிக்கப்பட்டது.

யுத்தத்தால் மிகவும் பாதிக்கப்பட்டு மீள் குடியேறியுள்ள மக்கள் பொருளாதார ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நிலையில் மாணவர்களின் கல்வி மேம்பாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்ற நோக்குடன் நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இந்த நிகழ்வில் எம்கடமை அமைப்பின் பணிப்பாளர் க. கேமதாசன்.மூதூர் இனைப்பாளர் இ.ஜீவேந்திரன், பாட்டாளிபுரம் அகம் கூட்டுறவுச் சங்க தலைவர் த.ஶ்ரீகந்தராசா ஆசிரியர் மா.பிரியதர்சினி, பெற்றார்கள் மாணவர்கள் உட்படப் பலர் கலந்துகொண்டனர். (05)

# பொது இடங்களில் குப்பை கொட்டிய 20 பேருக்கு எதிராக வழக்கு தாக்கல்

## கண்டி மாநகர சபை நடவடிக்கை

கண்டி நகர எல்லையில் சட்டவிரோதமான முறையில் பொது இடங்களில் குப்பைகளை கொட்டிய 20 பேருக்கு எதிராக வழக்குத் தொடர கண்டி மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

சமூகத்தில் உயர்தர தொழில் துறைகளில்ஈடுபடுபவர்களேஇவ்வாறு சட்டவிரோதமான முறையில் குப்பைகளை போடுகின்றனர் எனவும் இவ்வாறு அவர்கள் வாகனங்களில் வந்து முறையற்ற வகையில் பொது இடங்களில்குப்பைகளைகொட்டுகின்ற காட்சிகளைபொலிஸாரின்உதவியுடன் அடையாளம் காணப்பட்டதாகவும் கண்டிமாநகரஆணையாளர் இஷான் விஜேதிலக தெரிவித்தார்.

கட்டுகஸ்தோட்ட பிரதேசத்தில் உள்ள கொஹாகொட குப்பை பிஷமேட்டில் பொருத்தப்பட்டுள்ள புதிய இயந்திரத்தால் பிரிக்கப்படாத குப்பைகளை அனுப்ப முடியாது எனவும் மேலும் அவ்வப்போது அகற்றப்படும் குப்பைகளை, நகராட்சி ஊழியர்கள் மீண்டும் பிரிக்க வேண்டியுள்ளது. இப்பணிகள் மிகவும் கஷ்டமான தொரு பணியாக உள்ளதால் பணியாளர்கள் குப்பைகளை எடுப்பதில் ஆர்வம் காட்டுவது மிகவும்குறைவு எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

குப்பைகளை மக்கும் மற்றும் மக்காத குப்பை என பிரித்து தருமாறு கண்டி மாநகர சபையால் எத்தனை முறை தெரிவித்தும், ஒரு சிலரே இவ்வாறு செய்கிறார்கள் என்றும், இதனால் அனைத்து மக்களும் அசௌகரியம் உள்ளாக்கப்பட்டு வருகின்றனர் எனவும் ஆணையாளர் தெரிவித்தார்.

மேலும் சட்டவிரோதமாக பொது இடங்களில் கழிவுகளை வீசுபவர்கள் பெரும்பாலும்கார்களில்வருபவர்களால் மேற்கொள்ளப் படுவதாகவும், சிசிடிவி கமராக்களை பயன்படுத்தி அவர்களை அடையாளம் காண நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் ஆணையாளர் மேலும் தெரிவித்தார். (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 17.03.2024இல் வெளியிடப்பெற்றது.